# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஜுன் 21 2019. இதழ் - 67










வேதனையை அதிகமாக்கும் கல்முனை விவகாரம்

பக்கம் - 03




ஹிஸ்புல்லாவின் அரசியலும் சஹறான்களின் உருவாக்கமும்

பக்கம் - 04



இரு இனத்து மாணவர்களையும் மிக இறுக்கமாக இணைக்கத் தளமிட்ட வந்தாறுமூலை மத்திய கல்லூரி- புடம் போட்ட வாழ்க்கை

பக்கம் -10



இணைய அடிமையாதல் எனும் மெல்லக்கொல்லும் விஷம்

பக்கம் - 07





## கல்முனையில் நான்காவது நாளாகப் போராட்டம் தீவீரமடைகிறது! மக்கள் அதிகம் கூடுவதால் பொலிஸார் குவிக்கப்பட்டனர்

( காரைதீவு நிருபர் சகா)

கல்முனையில் வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி நடைபெற்றுவரும் உண்ணாவிரதப் போராட்டம் (20) வியாழக்கிழமை நான்காவது நாளாகத் தொடர்ந்தது.

கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி வண.ரண்முத்துகல சங்கரத்ன தேரர், கல்முனை முருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு.சச்சிதானந்தசிவக் குருக்கள், தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன், அ.விஜயரெத்தினம், அனைத்து இந்து ஆலயங்களின் ஒன்றியத்தலைவரும் தொழிலதிபருமான கே.லிங்கேஸ்வரன் ஆகியோர் உண்ணாவிரதத்தில் உள்ளனர்.

.

உண்ணாவிரதிகளின் உடல்நிலை மிக மோசமாகி வருகிறது. மருத்துவர்கள் இடையிடையே வந்து பரிசோதனை செய்கின்றனர். உண்ணாவிரதிகள் வைத்தியசாலைக்குச் செல்ல மறுக்கின்றனர். படுத்த படுக்கையில் கிடக்கிறார்கள்.

மதகுருமார்களான கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதி வண.ரண்முத்துகல சங்கரத்ன தேரர், கல்முனை முருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ க.கு. சச்சிதானந்தசிவக்குருக்கள் ஆகியோர் கூட்டாகத் தெரிவிக்கையில் இப்போராட்டம் வெற்றியளிக்காவிடில் நாம் இருவரும் கட்டித்தழுவியவாறு தீக்குளிப்போம் என்று கூறினர்.

இதேவேளை 50 பெண்கள் அடையாள உண்ணா விரதப்போராட்டத்தில் குதித்துள்ளனர். வழமைக்கு மாறாக


தொடர்ச்சி... (பக்கம் -15)


## 'கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படும்' ---- ரணில்

---நி.அமிர்தஸன் ---



கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் உரையாடியுள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அதேவேளை, இந்த விவகாரத்தைப் பயன்படுத்தி மகிந்த ராஜபக்ச தரப்பு தேர்தலில் கிழக்கு மாகாணத் தமிழர்களின் வாக்குகளைப் பெற முற்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

## பிரதேச செயலக தரமுயர்தலைத் தடை செய்யகோரி முஸ்லிம்கள் போராட்டம்!



( காரைதீவு நிருபர் சகா)

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தடை செய்யக் கோரி முஸ்லிம் பிரதிநிதிகள் கல்முனையில் சத்தியாகிரகப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

நேற்று(20) காலை கல்முனை ஐக்கிய சதுக்க முன்றலில் ஒன்று கூடிய அப்பிரதிநிதிகள் இனத்துவ ரீதியிலும் நிலத் தொடர்பற்ற ரீதியிலும் உருவாக்கப்பட எத்தனிக்கும் பிரதேச செயலகத்தை தடை செய்யக் கோரி சத்தியாகிரகம் மேற்கொண்டுள்ளனர்.

மேலும் இப்போராட்டத்தில் அரச சார்பற்ற சில அமைப்புகளுடன் மாநகர மேயர் மற்றும் உறுப்பினர்கள் உள்ளடங்களாக கல்முனை வர்த்தக சமூகம் பங்கெடுத்துள்ளது.




# தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையினது மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் (இலங்கை) முதலாவது செயற்பாடு

**மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலய மாணவர்களுக்கான தமிழ்ப்பாடச் செயலமர்வு**



தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்டக் கிளை, (இலங்கை) 2019இல் க.பொ.த (உ.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலய மாணவர்களுக்கு தமிழ்ப் பாடச் செயலமர்வினை மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்திலுள்ள மட்/மமே/ குறிஞ்சாமுனை அ.த..க.பாடசாலையில் நடத்தியது. இது, தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையினது மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் (இலங்கை) முதலாவது செயற்பாடாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.



தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையினது தலைவரும் ஓய்வு பெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமாகிய தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில் ஓய்வுநிலைப் பேராசிரியர் கலாநிதி செ.யோகராசா, ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்(தமிழ்) திரு.த.யுவராஜன் ஆகியோர் வளவாளர்களாகச் செயற்பட்டனர்.

திரு.எஸ்.மனோகரன் அவர்கள் தலைமையுரையில் தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின்(தமிழ்நாடு) தலைவர் திரு.அப்பாஸ்வாமி சேக்கிழார் அவர்களினதும் சர்வதேச அமைப்பாளர் முல்லை நாச்சியார் அவர்களினதும் தமிழ் ஆர்வம்பற்றி தெளிவாகப் பேசினார். பொருளாளர் திருமதி ரமணி ஜெயபாலன் அவர்களும் கலந்து சிறப்பித்தார். மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.சிறிதரன் அவர்கள் பேசும் போது, தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்டக் கிளைக்குப் பொருத்தமான



தலைமைத்துவம் கிடைத்திருப்பதாலும் செயற்றிறன்மிக்க செயலாளர் உள்ளிட்ட அங்கத்தவர்கள் கிடைத்திருப்பதாலும் இந்த அமைப்பு செவ்வனே செயற்படும் என்பதில் எனக்கு ஐயமில்லை என்றும் அவர்களது முதலாவது செயற்பாட்டை பின்தங்கிய பிரதேசத்தில் தொடங்கியிருக்கின்றமை அதற்கு ஆதாரம் என்றும் கூறினார்.தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையினது செயலாளர் திரு.த.யுவராஜன் அவர்கள் மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சி.சிறிதரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்(கல்வி அபிவிருத்தி) திரு.க.ஹரிகரராஜ்,



உதவிக் கல்விப் பணிப்பாளர்(தமிழ்) திரு.க.குணசேகரம், சேவைக் கால ஆலோசகர்(தமிழ்) திரு.பு.சதீஸ்குமார்,



பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் முதலியோருக்கு நன்றி தெரிவித்தார். மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தின் சார்பில் சேவைக் கால ஆலோசகர்(தமிழ்) திரு.பு.சதீஸ்குமார் நன்றி தெரிவித்தார்.

# 'ஐ எஸ்ஸால் இந்தியாவுக்கு ஆபத்து அதிகம்'

இலங்கை மற்றும் இந்தியாவுக்கு ஐ.எஸ் பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக இந்திய மத்திய உளவுத்துறை குறிப்பிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் கூறுகின்றன.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு தமது தளங்களை அங்கு இழந்துள்ளமையினால் இலங்கை மற்றும் இந்தியா இலக்கு வைக்கப்பட்டுள்ளதாக இந்திய மத்திய உளவுத்துறை கூறியுள்ளதாக அவை தெரிவித்துள்ளன.

கோவையில் உள்ள மூன்று இளைஞர்கள் ஐஎஸ். பயங்கரவாதிகளாக மாறி இருக்கிறார்கள் என்றும் அவர்களால் தென் இந்தியாவுக்கு குறிப்பாக தமிழ்நாட்டுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டு இருப்பதாகவும் மத்திய உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த மூன்று பயங்கரவாதிகளும் "அபு அல் கிடல்" எனும் பயங்கரவாத அமைப்பை நடத்தி வருகிறார்கள். அவர்கள் வெடிகுண்டு தாக்குதல் நடத்த ஒத்திகை பார்த்து இருப்பதாக உளவுத்துறை எச்சரித்துள்ளதாக இந்திய ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

இலங்கையில் தாக்குதலுக்கு தலைவனாக செயற்பட்ட ஸஹ்ரான் ஹாசிமுடன் தொடர்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் இந்தியாவில் அண்மையில் சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்தப்பட்ட முதல் கட்ட விசாரணையில் அவர்கள் தமிழ்நாட்டில்



நாசவேலை செய்ய திட்டமிட்டிருந்த தகவல் தெரிய வந்ததாக இந்திய ஊடகச் செய்திகள் கூறுகின்றன.

சந்தேகப்படும் நபர்கள் பட்டியலில் உள்ளவர்களை அதிக அளவில் நெருங்கி கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன், அந்த இளைஞர்களின் நகர்வுகளை வைத்து உடனுக்குடன் தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி...

## 'முதல் காலாண்டில் பொருளாதாரம் வளர்ந்தது'

இந்த வருடத்தின் முதல் காலாண்டு பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3.72 சதவீதமாக பதிவாகியுள்ளது.

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயம், கைத்தொழிற்துறை சேவை ஆகியவற்றிலேயே இந்த வளர்ச்சி இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பப்பாசி இலை புகையிலையாக மாற்றப்பட்டு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி

கலேவெல நடபகாவத்த புவக்பிட்டிய என்ற இடத்தில் பீடிக்கான புகையிலைக்கு பப்பாசி இலைகளை உலர்த்தி ஒன்று சேர்க்கும் இடம் ஒன்றை பொலிஸ் விஷேட அதிரடி படை முற்றுகையிட்டுள்ளது.

பாரிய அளவில் பப்பாசி இலைகளை உலர்த்துவதற்கு பெரும் எண்ணிக்கையிலான ஊழியர்களை பயன்படுத்தி இயந்திரத்தின் மூலம் வெட்டி எடுத்து செல்வதற்காக இவை வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பப்பாசி இலைகளை உலர்த்தி சிறியதாக வெட்டி அவுஸ்ரேலியாவுக்கு ஏற்றுமதி செய்வதாக ஒருவர் தெரிவித்துள்ளார். மருந்து மூலிகையாக பயன்படுத்துவதற்கு இவை அங்கு அனுப்பப்படுவதாக கூறப்படுகின்றன.

மருந்து மூலப்பொருளாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் தயாரிப்பதற்கும் அரசாங்க மருந்தக கூட்டுத்தாபனம் அல்லது தேசிய ஆயுர்வேத திணைக்களத்தினால் எந்தவித அனுமதியும் இது தொடர்பாக பெற்றுக்கொள்ளவில்லை என்பதும் ஆரம்ப விசாரணையின் மூலம் தெரியவந்தது.

# புகையிரத வேலை நிறுத்தம்



கடந்த நள்ளிரவு முதல் இரண்டு நாள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக புகையிரத தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

முன்னதாக, சம்பள முரண்பாடு உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து நேற்று நள்ளிரவில் இருந்து ஆரம்பிக்கவிருந்த பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது.

எவ்வாறாயினும் இன்று பிற்பகல் நிதியமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததையடுத்து அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை அறிவித்துள்ளனர்.

அதன்படி புகையிரத சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள் உள்ளிட்ட தொழிற்சங்கங்கள் சில இன்று நள்ளிரவு முதல் இரண்டு நாள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

# கண்டி மாவட்டத்தில் எந்தவொரு தௌஹீத் ஜமாஅத் பள்ளிவாசலும் பதிவு செய்யப்படவில்லை

கண்டி மாவட்டத்தில் தௌஹீத் ஜமாஅத் பள்ளிவாசலும் பதிவு செய்யப்படவில்லை என்று தபால் மற்றும் முஸ்லிம் மத அலுவல்கள் அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார்.

வக்பு சபையின் ஊடாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பள்ளிவாசல்களை பதிவு செய்வதாகவும் அமைச்சர் கூறினார். பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் அமைச்சர் அப்துல் ஹலீம் கருத்து வெளியிட்டார்.

கண்டி மாவட்டத்தில் தீவிரவாதம் கிடையாதென விவாதத்தில் கலந்து கொண்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். சிங்கள, பௌத்த மக்களுக்கு நியாயத்தை வழங்கி ஏனைய மக்களுக்கும் நியாயத்தை நிலைநாட்டுவது ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கையானுமென்றும் அமைச்சர் கூறினார்.

# பயங்கரவாதத்துடன் தொடர்பில்லாதவர்களை விடுதலை செய்ய உத்தரவு



உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் சிறிய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்கள் பயங்கரவாத தாக்குதலுடன் தொடர்பு இல்லாவிட்டால் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனைக்

தொடர்ச்சி... (பக்கம் -02)

# வேதனையை அதிகமாக்கும் கல்முனை விவகாரம்

கல்முனை விவகாரம் மிகவும் சங்கடமான நிலையை எட்டியுள்ளது. அங்கு கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு பலகாலமாக அப்பகுதியில் வாழும் தமிழர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை முன்னிறுத்தி அங்கு நடத்தப்படும் உண்ணாவிரதப் போராட்டம் மூன்றாவது நாளைக் கடந்துள்ளது.

அதேவேளை, அங்கு முஸ்லிம் அமைப்புக்கள் சில இணைந்தும் அதற்கு எதிராக ஒரு உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.

இந்தக் கல்முனை பிரதேச செயலக விவகாரம் குறித்து எமது அரங்கம் பத்திரிகை தொடர்ச்சியாக பல கட்டுரைகளை எழுதி வந்தது. பல காலங்களுக்கு முன்னதாக துணைச் செயலகமாக ஆரம்பிக்கப்பட்ட இது, அதனுடன் ஆரம்பிக்கப்பட்ட ஏனைய செயலகங்கள் தரமுயர்த்தப்பட்ட பின்னரும் புறக்கணிக்கப்பட்டமை குறித்து அதில் குறிப்பிட்டிருந்தோம்.

அது மாத்திரமல்லாமல், அம்பாறை மாவட்டத்தில் தமிழர் தொடர்ச்சியாகப் புறக்கணிக்கப்பட்டு வந்த நிலைவரம் குறித்தும் தம்பியப்பா கோபாலகிருஸ்ணன் அவர்கள் ஒரு தொடரை எழுதியிருந்தார்.

தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் தமிழர் தரப்புக் கட்சியாக தம்மை காண்பித்து வந்த தமிழரசுக்கட்சி, அதன் தலைமையில் இயங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியவை இந்த விவகாரத்தை கவனிக்காமல் இருந்து வந்தமை குறித்தும் நாம் எமது கட்டுரைகளில் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், இவை யாவும் கருத்தில் கொள்ளப்படாமல் இருந்து வந்த நிலைமை, இன்றைய நிலைமைக்கு காரணமாகியுள்ளது. எமது கட்டுரைகள் கூறியது போல அரசாங்கங்களை மாத்திரமல்லாமல் தமிழர் தரப்பு கட்சிகளையும் இந்த விடயத்தில் நாம் குறை கூறவேண்டியுள்ளது.

குறிப்பாக கிழக்கு மாகாணப் பிரச்சினைகள் சிறப்பானவை, பிரத்தியேகமானவை, அவற்றை தனித்துவமாக கணித்து நடவடிக்கைகளை எடுக்க தமிழ் கட்சிகள் திட்டமிடாமையே இந்த விவகாரம் பூதாகாரமாக வெடித்துள்ளதற்கு காரணம் என்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

"தமக்கு ஒரு முழுமையான பிரதேச செயலகம் வேண்டும்" என்ற கல்முனைத் தமிழர் கோரிக்கை காலத்தின் தேவையாகும். அதுமாத்திரமல்லாமல் இது பல நெடுங்காலமாக முன்வைக்கப்பட்டு வருவதாகும். அப்படியான ஒன்றுக்கான காரணிகள் என்ன என்பது குறித்து அங்கு வாழும் தமிழர் பல தடவைகள் அனைத்து தரப்புக்கும் விளக்கி வந்துள்ளனர்.

ஆனால், அரசாங்கத்தரப்பில் இருந்து அவை குறித்து நேரடியான, வெளிப்படையான பதில் எதுவும் இதுவரை வழங்கப்பட்டதில்லை. அரசாங்க அமைச்சர்கள் சிலர் கூட அவ்வப்போது தமது அரசியல் நலனை முன்வைத்து சமாளிக்கும் வகையிலான பதில்களையே தந்து வந்துள்ளனர்.

அங்குள்ள தமிழர்கள் தமது நீண்ட நாளையக் கோரிக்கையை நிறைவேற்ற இன்று இந்த உண்ணாவிரத்தை ஆரம்பித்துள்ளதில் நியாயம் இருக்கின்றது.
ஆனால், அவர்கள் சில பௌத்த மதகுருமாரையும் தமது போராட்டத்தில் இணைத்துள்ளமை சில தரப்பினரால் விமர்சிக்கப்படுகின்றது. ஆனால், உண்மையில் அவர்கள் அப்படிச் செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் என்பதுதான் இங்கு உண்மை.

பல தசாப்தங்களாக நிறைவேறாத தமது ஒரு சிறு கோரிக்கையை, சாதாரணமாகவே நடந்திருக்க வேண்டிய விடயத்தை நிறைவேற்ற முடியாத விரக்தி இந்த நிலைக்கு அவர்களை தள்ளியுள்ளது. ஆனால், அண்மைய இலங்கை அரசியல் நிலைவரங்களை வைத்துப் பார்க்கும் போதுதான் இங்கு கொஞ்சம் சங்கடமாக இருக்கின்றது.

தமிழர்களின் கோரிக்கைக்கு எதிராக அங்குள்ள சில முஸ்லிம்கள் போட்டி உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். "நிலத்தொடர்பற்ற பகுதி" என்று காரணம் கூறி, செயலகம் தரமுயர்த்தப்படுவதை அவர்கள் எதிர்க்கின்றனர். ஆனால், அது நிலத்தொடர்பற்றதாக காலத்துக்கு காலம் திட்டமிட்டு ஆக்கப்பட்டுள்ளது என்பது தமிழர் தரப்பு நியாயம்.

**சீவகன் பூபாலரட்ணம்**

அதேவேளை இதனை இன அடிப்படையிலான பிரதேச செயலகம் என்று குறை கூறி, அதனைத் தடுப்பது அவ்வளவு சரியானதாகத் தெரியவில்லை. அப்படிப்பார்த்தால் கிழக்கு மாகாணத்தை தனியாக வைத்திருப்பதற்காக முஸ்லிம் தலைவர்களால் கூறப்படும் நியாயங்களுக்கு என்ன சொல்வது?

அம்பாறையில் தமிழர்கள் படிப்படியாக ஒதுக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள் என்பது பலராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய உண்மை. அதற்கு யார் காரணம் என்பதில் வேண்டுமானால் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அவர்கள் மேலும் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு வழி செய்தாக வேண்டும். உண்மையில் இன்னுமொரு சிறுபான்மையான முஸ்லிம்கள் அதற்கு உதவியாக இருந்திருக்க வேண்டும்.

பதிலாக போட்டி உண்ணாவிரதம் நடத்துவது நிலைமையை மேலும் சிக்கலாக்கவே வழி செய்யும். இனப்பதற்றத்தை அதிகரிக்க தூபம் போடும்.

கண்டி பிக்குமாரின் உண்ணாவிரதம் எப்படியான இக்கட்டான சூழலை ஏற்படுத்தியதோ, அதேபோன்ற ஒரு சூழ்நிலையையே முஸ்லிம்கள் நடத்தும் போட்டி உண்ணாவிரதம் ஏற்படுத்தும். தாம் பெரும்பான்மையாக உள்ள இடத்தில் முஸ்லிம்களும் தவறாக நடக்கிறார்கள் என்ற உதாரணத்துக்கு இது காரணமாகிவிடும். முஸ்லிம் தலைவர்கள் இந்த விடயத்தில் இன்னும் பொறுப்புணர்வுடன் இருந்திருக்க வேண்டும்.

மொத்தத்தில் அரசியல் தலைவர்களின் பொறுப்பற்ற தனம் இன்னுமொரு இக்கட்டான சூழலை ஏற்படுத்தக் காரணமாகியுள்ளது.

இனியாவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவும், நிலைமையை சுமுகமாக்கவும், பிரச்சினையை இழுபடாமல் முடித்து வைக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், எல்லா பிரச்சினைகளிலும் இந்த அரசாங்கம் தோல்வியையே காண்கிறது என்ற அவப்பெயரும் இதற்குச் சேர்ந்துவிடும். மொத்தத்தில் இன நல்லிணக்கத்துக்கான இன்னுமொரு பாதக அடியாகிவிடும்.

---

# சொல்லத் துணிந்தேன்! 11

ஒரு சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியொன்றின் செயற்பாடுகள் மற்றும் அக்கட்சியின் அரசியல் நிகழ்ச்சிநிரல் அச்சமூகத்தினரைச் சமூக பொருளாதார ரீதியாக மேம்பாடடையச் செய்வதாகவும் வலுவூட்டுவதாகவும் விளங்க வேண்டும். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் செயற்பாடுகள் அதி குறைந்த பட்சம் கடந்த முப்பது (1979-2009) வருடகால உள்நாட்டு யுத்தம் ஒன்றின் சகல கொடுமைகளுக்கும் உள்ளாகிப் போயிருக்கும் வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கு எந்த விதமான சமூக பொருளாதார நலன்களையும் பெற்றுத் தருவதாக இல்லை. பெற்றுத்தரும் நோக்கம் உடையதாகவும் இல்லை. மாறாகத் தேர்தல்களை மட்டுமே மையப்படுத்தி வாக்குச்சேகரிக்கும் தங்கள் கட்சி அரசியலுக்கு ஆள்சேர்க்கும் வகையில் சில தனிநபர்களைப் பாராளுமன்றத்திற்கும் மாகாணசபைகளுக்கும் மாநகர, நகர, பிரதேச சபைகள் போன்ற உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கும் அனுப்பிப் பதவி வழங்கும் ஒரு 'வேலைவாய்ப்பு முகவர்' போன்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்து கொள்கிறது. படித்தவர்கள், கல்விமான்கள் என்பதற்காக மக்கள் நலம் சார்ந்ததான தத்துவார்த்த அரசியல் தளமற்ற புதியவர்களைப் 'போடு காய்'களாகவும் தங்கள் சேவைக் காலத்தில் எந்த சமூக அக்கறையும் இல்லாமல் தான் உண்டு தன் குடும்பம் உண்டு என்று வாழ்ந்து ஓய்வுபெற்ற அரசாங்க அதிகாரிகளையும் பணம் படைத்தவர்கள் என்பவதற்காக மட்டும் சில ஒப்பந்தக்காரர்களையும் வர்த்தகர்களையும் வேட்பாளர்களாக நிறுத்தி வெல்லப்பண்ணுவதையே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தனது பிரதான அரசியல் நிகழ்ச்சி நிரலாகக் கொண்டுள்ளது. இது ஒரு வகையில் 'கம்பெனி' வியாபாரம் போன்றதே தவிர வேறல்ல.

எந்தவிதமான தத்துவார்த்த அரசியல் தளமும் இல்லாமல் கடந்த காலத்தில் எந்தவிதமான சமூக அரசியல் செயற்பாட்டுப் பின்னணிகளும் இல்லாமல் தேர்தலில் நின்று பதவி நாற்காலிகளைப் பற்றிக் கொள்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு கட்சியில் சேர்ந்த சுயலாப அரசியல்வாதிகளை வைத்துக்கொண்டு மக்கள் நலன் சார்ந்த அரசியலை முன்னெடுப்பது சாத்தியமில்லை என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (தமிழரசுக் கட்சியின்) கடந்த கால/சமகால வரலாறு சுட்டிக் காட்டுகிறது.

'அபிவிருத்தி வேண்டாம் அரசியல் தீர்வுதான் முன்னுரிமை' என்று கோஷமிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மற்றும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களும்



மாகாணசபை உறுப்பினர்களும் சுங்க வரி அற்ற சலுகை அடிப்படையில் சொகுசு வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் சம்பளம் உட்பட ஏனைய அரசாங்கக் கொடுப் பனவுகளையும் ஏனைய சலுகைகளையும் தாமதியாது பெற்றுக்கொள்வதற்கும் அமைச்சர்களையும் ஆளுநர்களையும் அரசாங்க உயர் அதிகாரிகளையும் பின்கதவால் சென்று சந்திப்பதும், அவசியம் ஏற்பட்டால் தங்கள் சுய தேவைக்காக ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்துத் தங்கள் சொந்தக் காரியங்கள் பலவற்றை முடித்துக்கொள்வதும் மக்கள் மத்தியில் பரவலாகப் பேசப்படும் விடயங்கள். தங்களை நம்பி வாக்களித்த மக்களைப் பற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படாது தங்களை மட்டுமே அபிவிருத்தி செய்யும் சுயநல அரசியலைத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்து வருகிறது.

முன்னர் இருந்த தமிழரசுக்கட்சியின்- தமிழர் விடுதலைக் கூட்டணியின்- அரசியல் தலைவர்கள் தாங்கள் வாக்குறுதி அளித்த அரசியல் இலக்குகளைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதில் தோல்வியைத் தழுவி இருந்தாலும்கூட பொதுவாழ்க்கைக்கு வந்து தங்கள் சொத்து சுகங்களை அரசியல் வாழ்வில் இழந்தவர்களாகக் குறைந்த பட்சம் உண்மையாகவும் நேர்மையாகவும் வெளிப்படையாகவும் விளங்கினர். தமிழரசுக் கட்சியை நிறுவிய எஸ்.ஜே.வி செல்வநாயகம் (தந்தை செல்வா) அவர்கள் தனது தேயிலைத் தோட்டங்களை விற்றுத்தான் 'சுதந்திரன்' பத்திரிகை நடத்தினார். ஆனால் இன்றைய போலித் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள்

**தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்**

அரசியலுக்கு வந்து வீடு வளவு தோட்டம் துரவு என சொத்துக்கள் வாங்குகிறார்கள் (விரல் விட்டு எண்ணக்கூடிய ஓரிருவர் இதற்கு விதிவிலக்காக இருக்கக்கூடும்) 'ஊருக்கு உபதேசம் உனக்கல்லடி' என்பது போல் அபிவிருத்தி தங்களுக்கு மட்டுமே வேண்டும்: மக்களுக்கு இல்லை என்றவாறு நடந்து கொள்கின்றனர். மக்களை ஏமாற்றுகிறார்கள். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் போல்தான் செயல்படுகின்றது. இன்று தலைவர்கள் என வலம் வருவோர் திருந்தப்போவதில்லை. அவர்களைத் திருத்தவும் முடியாது. எனவே 'பழைய குருடி கதவை திறடி' எனும் கதையாக மீண்டும் மீண்டும் பழைய பாதையிலேயே சென்று படுகுழியில் விழாமல் மாற்று அரசியல் பாதையை நோக்கி தமிழ் மக்கள் இனிச் சிந்திக்க வேண்டும். இதுவரை இவர்களை நம்பி ஏமாந்தது போதும்.

# ஹிஸ்புல்லாவின் அரசியலும் சஹரான்களின் உருவாக்கமும்



சென்ற வாரம் முழுவதும் ஹிஸ்புல்லாவின் உரையான 'நாங்கள் இந்த நாட்டிலேதான் சிறுபான்மை உலகத்தில் பெரும்பான்மை.' என்பதுதான் ஊடகங்களின் முக்கிய செய்தியாக இருந்தது. இதற்கு முன்பு அவர் தனது மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி ஓட்டமாவடியில் காளி கோயிலை இடித்து மீன்சந்தை கட்டுவித்தேன் என்றும் முஸ்லீம் இளைஞர்களுக்கு ஆயுதம் கொடுத்து முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாத்தேன் என்றும் நீதிபதியை இடம்மாற்றி தனக்கான நீதியியைப் பெற்றுக்கொண்டேன் என்றும் முஸ்லீம் ஒருவர் கிழக்கில் முதலமைச்சராக பதவி ஏற்கின்ற போது வடகிழக்கு தமிழர்களின் தாயகம் என்ற அடிப்படை இல்லாமல் போவதோடு கிழக்கு முஸ்லிம்களின் தாயகம் என்கின்ற நிலை உருவாகும் என்றும் வடகிழக்கு இணைக்கப்பட்டால் இரத்த ஆறு ஓடும் என்றெல்லாம் பேசியிருந்தார். அப்போதெல்லாம் ஹிஸ்புல்லாவின் உரை எந்த ஒரு சிங்கள ஊடகங்களுக்கும் அரசியல்லாதிகளுக்கும் ஆபத்தானத்தாகவும் சட்டத்துக்கு எதிரானதாகவும் தெரியவில்லை. ஏனென்றால் அவரது அந்தச் செயற்பாடுகளும் உரைகளும் தமிழர்களுக்கு எதிரானதாக மட்டுமே இருந்தன. தமிழர்களுக்கு எதிரான எல்லாச் செயற்பாடுகளையும் முஸ்லிம், சிங்கள சனநாயகவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள் கூட மறந்தும் வாய்திறக்காமல் எல்லாவற்றையும் மௌனமாக அங்கீகரித்திருந்தார்கள். ஆனால் இப்போது அவர் கூறிய 'நாங்கள் இந்த நாட்டிலேதான் சிறுபான்மை உலகத்தில் பெரும்பான்மை.' எனும் விடயம் சிங்களவர்களுக்கு ஆபத்தானதாக இருப்பதை உணர்ந்துதான் சிங்கள ஊடகங்கள் அதற்கு முக்கியத்துவத்தினையும் அரசியல் தலைவர்கள் ஹிஸ்புல்லாவுக்கு தமது கண்டனத்தையும் வெளிப்படுத்துகிறார்கள்.

ஹிஸ்புல்லாவின் இதுவரை காலப் பேச்சுகளையும் செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டு அவருடைய அரசியல் நோக்கை பின்வருமாறு வரையறுக்கலாம்.

1. முஸ்லீம்களை அரபுமயப்படுத்தல் ஊடாக அவர்களை தனியான ஒரு தேசிய இனமாக கட்டமைத்தலும் அதனை இஸ்லாமிய அடிப்படைவாதக் கோட்பாடுகளைக் கொண்டு பாதுகாத்தலும்.

2. முஸ்லீம்களின் தாயகப் பிரதேசமாக கிழக்கை ஸ்தாபித்தலும் அதனைத் தளமாகக் கொண்டு இஸ்லாமிய அடிப்படைவாத மயமாக்கத்தினை முழு இலங்கைக்கும் விஸ்தரித்தலும்.

1. ஹிஸ்புல்லாவின் அரசியல் பிரவேசத்துக்குப் பின்பே காத்தான்குடி அரபுமயப்படுத்தப்பட்டது. பெண்களின் ஆடை விடயமே முதலில் கொண்டுவரப்பட்டது. அதன் பின்பு அரபுமயப்பட்ட கட்டிடங்கள், அரபு எழுத்துக்கள், ஈச்சமரங்கள், வரவேற்புத் தோரணங்கள், காத்தான்குடிக்கான நூதனசாலை என்று விரிவடைந்தது. இதன் பின்பே இந்த அரபுமயமாக்கம் கிழக்கின் ஏனைய முஸ்லிம் பிரதேசங்களுக்கு வியாபித்தது. பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த காத்தான்குடி பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் பிரதிநிதி சட்டத்தரணி அபுசாலி உவைஸ் கூறும்போது காத்தான்குடியின் பிரதிநிதி ஹிஸ்புல்லா என்றும் அவருடைய காலத்திலே அரபுமயமாக்கம் இடம்பெற்றது என்றும் கூறியிருந்தார். குறித்த விசாரணைக்குழுவிடம் ஹிஸ்புல்லா கூட அது அரபு மயமாக்கம் அல்ல எமது மக்களின் அடையாளம் என்றும் அவ்வாறு உள்ளதால் அதனுடன் இணைந்து செல்லும் வகையில் செய்தோம் என்றும் கூறியிருந்தார். அத்துடன் யாழில் இந்து கலாசாரமுறை உள்ளது. தெற்கில் பௌத்த முறைமை உள்ளது அது போன்றுதான் எனவும் நியாயப்படுத்தியிருந்தார். இங்கு அராபிய உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்கே அரபு எழுத்தக்களைப் பயன்படுத்தியதாகவும் சூடான காலநிலைக்கு ஈச்சமரமே பொருத்தமானது என்பதால் அவற்றை நட்டதாகவும் தனது விளக்கத்தை முன்வைத்திருந்தார். அவருடைய விளங்கங்கள் சிறுபிள்ளைத் தனமாக இருந்தபோதும் அரபுமயப்படுத்தலை முஸ்லிம்களின் அடையாளமாக ஏற்றுக்கொள்கிறார் என்பது தெளிவாகின்றது.

இந்த அரபுமயப்பாட்டின் பெறுபேறுதான் சஹரான் காசிமும் அவர் சார்ந்திருந்த தேசிய தௌகீத் ஜமாத் அமைப்புமாகும். இதன்காரணத்தினால்த்தான் தேசிய தௌகீத் ஜமாத் அமைப்பின் பள்ளிவாசலை முஸ்லிம்களே உடைத்த போது அதற்கு கடும் கண்டனத்தினை ஹிஸ்புல்லா தெரிவித்திருந்தார். இது போன்றுதான் ஆணைக்குழுவுக்கு சாட்சியமளித்த போது கூட சஹரானை ஒரு பயங்கரவாதியாக அன்றி அவரை ஒரு அடிப்படைவாதியாகத் தனக்குத் தெரியும் என்றும் அவர் ஒரு சிறந்த மதத்தலைவராகவும் சித்திரித்திருந்தார்.

சஹரானுடைய அடிப்படைவாதத்துக்கு எதிராக காத்தான்குடியிலும் கல்முனையிலும் பலவிவாதங்களும் உரைகளும் பிரசாரங்களும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றிருந்தன. அந்த மக்களும் மௌலவிகளும் சஹரானை ஒரு மதத்தலைவராக ஏற்றுக்கொள்ளாதபோது காத்தான்குடியின் தலைவராக இருக்கின்ற ஹிஸ்புல்லா 'சஹரானை" சிறந்த மதத்தலைவராக கூறுகின்றார் என்றால் தான் உருவாக்கிய அரபுமயப்பாட்டின் நடைமுறைப் பிரதிநிதியாக சஹரானை ஏற்றுக்கொள்கிறார் என்பதுதான் அர்த்தமாகும். இவ்வாறு அரபுமயப்பாடு பயங்கரவாதத்தினை உற்பவிக்கின்ற காரணத்தினால்த்தான் சிங்கள, தமிழ் சமூகங்கள் முஸ்லிம்களின் அரபுமயப்பாட்டினை அச்சத்துடன் நோக்கி 'நீங்கள் இலங்கை முஸ்லிம்களாக இருங்கள்' என்று மிகப் பௌவ்யமாக வேண்டுகோள் விடுக்கின்றார்கள். அரங்கம் ஆசிரியர் திரு.பூ.சீவகன் கூட இக்கோரிக்கையினை முன்வைத்திருந்தார். முஸ்லிம்களுக்குச் சார்பான கோரிக்கைகளை சீவகன் முன்வைக்கும் போது ஓடோடிவந்து சீவகனைப் பாராட்டும் முஸ்லிம்கள் சீவகனுடைய அரபுமயப்பாட்டுக் கோரிக்கைக்கு சிலரைத் தவிர பெருமளவானோர் எதுவித பதிலும் அளிக்காமல் மௌனமாகி இருக்கின்றார்கள். இவர்களுடைய மௌனம் அரபுமயப்பாட்டினையும் அதனூடான இஸ்லாமிய அடிப்படைவாதக் கோட்பாடுகளையும் கேள்விக்குட்படுத்த முடியாது என்பதையே காட்டுகின்றது. இந்த நிலை முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களின் ஐயப்பாட்டினையும் அச்சத்தினையும் போக்குவதற்குத் தயார் இல்லை என்கின்ற செய்தியினையும் கூறுகின்றது.

2. முஸ்லீம்களின் தாயகப் பிரதேசமாக கிழக்கை ஸ்தாபித்தலும் அதனைத் தளமாகக் கொண்டு இஸ்லாமிய அடிப்படைவாத மயமாக்கத்தினை முழு இலங்கைக்கும் விஸ்தரித்தலும் என்ற விடயத்தில்... 1990களில் இருந்து இந்தத் திட்டம் ஹிஸ்புல்லாவினால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. இராணுவத்துடன் சேர்ந்தியங்கிய ஹிஸ்புல்லாவின் ஆயுதக் குழுவான 'ஜிகாத்' வேண்டுமென்றே அப்பாவித் தமிழ்மக்களை படுகொலை செய்தது. வந்தாறுமூலைப் பல்கலைக் கழகப் படுகொலை, கொக்கட்டிச்சோலைப் படுகொலை, போன்ற கூட்டுப் படுகொலைகள் எல்லாம் ஜிகாத் என்னும் முஸ்லிம் ஆயுதக்குழுவின் பிரசன்னத்துடனே நிகழ்ந்தன. யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்பு இவர்களால் பயன்படுத்தப்பட்ட ஒரு தொகை ஆயுதங்களை ஹிஸ்புல்லா அவர்களும் தற்போதைய காத்தான்குடி நகரசபைத் தலைவர் அஸ்பர் அவர்களும் இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தனர். இது பற்றிய காணொளியும் வெளியிடப்பட்டிருந்தது. இந்த ஆயுதக் குழுவில் இயங்கியவர்தான் தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் சஹரானின் ஆயுதங்களுக்குப் பொறுப்பாக இருந்தவரும் வவுணதீவு பொலிசார் படுகொலையுடன் தொடர்புபட்டவருமாக சந்தேகிக்கப்படும் மில்ஹான் என்பவராகும்.

ஹிஸ்புல்லாவின் ஆயுதக் கலாசாரத்துக்குப் பின்பு கிழக்குத் தமிழர்களை ஒடுக்குவதற்கு அவர் எடுத்துக் கொண்ட ஆயுதம் அரசியல் அதிகாரமாகும். ஓட்டமாவடி காளி கோயிலை அந்த அதிகாரத்தினை வைத்தே கையகப்படுத்தியதாக கூறுகின்றார். அத்துடன் மாகாண சபைத் தேர்தல் காலத்தின் போது ஆற்றிய உரையொன்றினை ஒரு ஊடகம் 13.06.2019 அன்று பதிவெற்றியிருந்தது, அதில் ஹிஸ்புல்லா கீழ்கண்டவாறு கூறுகின்றார்.

'இப்ப என்ன சொல்கிறார்கள் என்றால் வடகிழக்கு தமிழர்களின் தாயகம் என்கிறார்கள் ஒரு முஸ்லிம் ஆள் முதலமைச்சராக வந்தால் அதுக்குப்பிறகு சொல்லேலுமா? அதுக்குப் பிறகு என்னென்று சொல்லணும் இந்த மாகாணம், இந்த மண், முஸ்லிம்களினது தாயகம் ஏன்றுதானே மாறணும். அதற்குப் பிறகு தமிழர்களின் தாயகம் என்று சொல்லேலுமா? சொல்லேலாது. மிகத் தெளிவான விடயம்.'

முஸ்லிம் காங்கிரசின் மறைந்த தலைவர் அஸ்ரப் அவர்களும் பிற முஸ்லிம் தலைவர்களும் வடகிழக்கு தமிழர்களின் தாயகப் பிரதேசம் என்பதனை ஏற்றுக்கொண்டு அம்பாறை மாவட்டத்தில் தனி அலகுக் கோரிக்கையினையே முன்வைத்துச் செயற்பட்டனர். ஆனால் ஹிஸ்புல்லா மிகத் தெளிவாக தமிழர்களின் தாயகக் கோட்பாடை தகர்த்தழித்து தமது தாயகமாக்குகின்ற நோக்குடனே செயற்படுகின்றார் என்பதற்கு அவருடைய உரையே உதாரணமாகும்.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அரசாங்கத்துடன் இணைந்திருந்து சகல நன்மைகளையும் சலுகைகளையும் தமது சமூகத்துக்கு பெற்றுக்கொடுத்து போர் ஓய்ந்த நிலையில் தமிழ் ஆயுதக்குழுக்களினால் தமக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று தங்களது ஆயுதங்களைக் கையளித்த பின்பு இலங்கையில் பெரும்பான்மையாக வசிக்கும் கிழக்கு மாகாணத்தை தங்களுக்கான ஒரு தாயகப் பிரதேசமாக உரிமைகோர முயல்கிறார்கள் என்றால் அது அவர்களின் இன உரிமைக்காக அல்ல மாறாக அதனைத் தளமாகக் கொண்டு முழு இலங்கையையும் அடிப்படைவாத இஸ்லாமிய மயப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான முதல்படி என எண்ணவேண்டியுள்ளது. இந்த எண்ணக் கருவில் முஸ்லிம் சமூகத்தை வளப்படுத்தும் மையமே ஹிஸ்புல்லாவினால் வெலிக்கந்தையில் அமைக்கப்பட்டுவரும் பல்கலைக்கழகமும் ஆகும். இந்தச் செயற்திட்டத்துக்காகவே பெருமளவு நிதியினை சவுதி அரசாங்கம் வழங்கியிருக்கின்றது என்ற ஏனைய சமூகங்களுக்கு இருக்கின்ற நியாயமான சந்தேகத்தினை நிவிர்த்திக்காது அதனை வலுப்படுத்தும் வகையிலே ஹிஸ்புல்லாவினுடைய உரைகளும் செயற்பாடுகளும் அமைகின்றன.

வடக்கு கிழக்கு இணைக்கப்படுமானால் ஆயுதமேந்திப் போராடுவோம் என்றும் இரத்த ஆறு ஓடும் என்றும் பாராளுமன்றத்தில் பேசியதை பாராளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையிலும் ஏற்றுக்கொண்டிருந்தார்.

இன உரிமைப் போராட்டம் என்றால் கூட எந்த ஒரு தேசிய இனமும் தனது தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை மற்றொரு தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை அடக்கி ஒடுக்கி அடைய நினைப்பது உண்மையான தேசிய இன விடுதலை இல்லை. அது அடக்குமுறைப் போராட்டமாகும். இதனை தமிழ் இனம்

எழுவான் வேலன்

சிங்கள, முஸ்லிம் இனங்களுக்குச் செய்தாலும் சரிதான் அல்லது முஸ்லிம் இனம் சிங்கள, தமிழ் இனங்களுக்குச் செய்தாலும் சரிதான் அது தேசிய இன விடுதலைப் போராட்டமாக இருக்க முடியாது. தமிழர்களின் போராட்டம் முஸ்லிம் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் எதிரான வடிவம் எடுத்ததன் காரணத்தினால்த்தான் தமிழர்களின் தேசிய இனப் போராட்டத்தினை 'குறுந்தேசியவாதப் போராட்டம்' என்று தமிழ் முற்போக்குவாதிகள் குறிப்பிடுகின்றனர்.

சுதந்திரத்துக்கு முற்பட்ட காலந்தொடக்கம் தமிழர்களால் முன்வைக்கப்படும் சுயநிர்ணயக் கோரிக்கைக்கு எதிராக முஸ்லிம்கள் ஆயுதமேந்திப் போராடி இரத்த ஆறு ஓடவைக்க வேண்டிய அரசியல் தேவை என்ன என்பதனை இதுவரைகாலமும் முஸ்லிம் தலைவர்களும் முஸ்லிம் சமூகமும் முன்வைக்காத நிலையில் வடகிழக்கு இணைப்பை எதிர்த்தல் என்பது கிழக்கை முற்று முழுதான அடிப்படைவாத இஸ்லாமிய பிரதேசமாக மாற்றுவதற்கான மறைமுகமான வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியேயாகும் எனலாம். இதனை உறுதி செய்யும் வகையில் ஆளுநர் பதவியை இராஜினாமாச் செய்ததன் பின் பள்ளிவாசலில் அவர் ஆற்றிய உரையினை எடுத்துக்காட்டலாம்.

'எல்லோரும் ஒதுங்கிப் போனால் கடைசியிலே இச்சமூகம் இன்னொரு மியன்மாரைத்தான் நாங்கள் சந்திக்க வேண்டி வரும். சிலர் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள், அல்லா பாதுகாப்பான். ஆகவே நாங்கள் ஆயத்தமாக வேண்டியிருக்கிறது. நாங்கள் எங்களைத் தயார் படுத்த வேண்டியிருக்கிறது. எங்களுடைய பாதுகாப்புக்களை உறுதிசெய்யவேண்டியிருக்கிறது. சட்டரீதியான சட்டபூர்வமாக எவ்வாறு வடகிழக்கிலே முஸ்லிம்களுடைய பாதுகாப்பினை உறுதிசெய்து இன்று இந்த மண்ணிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோமோ அவ்வாறான ஒரு சூழ்நிலையை முழு நாட்டிலும் நாங்கள் உறுதிப்படுத்த வேண்டும். ........................ உங்களுடைய தலைவர்கள் இளைஞர்கள் அன்று ஆயுதங்களைத் தூக்கி இந்த மண்ணுக்கு வந்ததன் காரணமாக இன்று நாங்கள் இந்த மண்ணிலே நிம்மதியாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.................. நாங்கள் யாரும் அஞ்சக்கூடாது, யாரும் பயப்படக்கூடாது, யாருக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. நாங்கள் அல்லாவுக்கு மாத்திரம்தான் பயப்பட வேண்டும். உயிருக்கு யாரும் அஞ்சவேண்டிய அவசியமில்லை. சிலர் நினைக்கிறார்கள் நாங்கள் இந்த நாட்டிலே சிறுபான்மை என்று, நாங்கள் இந்த நாட்டிலேதான் சிறுபான்மை உலகத்தில் பெரும்பான்மை.' எனக் கூறியிருந்தார்.

தொடர்ச்சி... (பக்கம் -15)

# சோறுடைத்த சோழர்கள் மீது சேறடித்தாரா இயக்குனர் ரஞ்சித்?

"சோழ வளநாடு சோறுடைத்து" என்பது ஔவையார் வாக்கு. அதாவது காவிரியாற்று படுகையில் அமைந்த சோழர்களின் நாடு செல்வம்கொழிக்கும் வளநாடாய் திகழ்ந்தமை பற்றிய பாட்டு அது.

அத்தகைய சோழ சாம்ராஜ்சியத்தின் சக்கரவர்த்தி இராஜராஜ சோழனை பற்றி திரைப்பட டைரக்டர் ரஞ்சித் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் தமிழ் நாட்டில் மிகப்பெரிய அதிர்வலைகளை உருவாக்கியுள்ளன. கூட்டமொன்றில் பேசியபோதே டைரக்டர் ரஞ்சித் இத்தகைய கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அதாவது "சோழர் ஆட்சி என்பது ஒரு இருண்டகாலம்", இராஜராஜ சோழனது ஆட்சிக்காலத்திலேதான் சாதிய ஒடுக்குமுறைகள் பலம் பெற்றன", "சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டன", "தேவதாசிமுறைகள் பெரு வளர்ச்சி பெற்றன" என்றவாறாக குற்றச்சாட்டுக்களை வரிசைப்படுத்தியுள்ளார்.

ரஞ்சித்தின் இந்த உரையானது சரியானதா? பிழையானதா? வரலாற்று ஆதாரங்களை கொண்டதா? என்றெல்லாம் சூடான வாதப்பிரதிவாதங்கள் தமிழ் பரப்பில் அள்ளி வீசப்படுகின்றன.

அவை ஒருபுறமிருக்க அவரது பேச்சு சோழர்கள் மீது தமிழ்ச்சமூகம் கொண்டிருக்கும் வரலாற்றுப் பெருமையை சற்று ஆட்டங்காண செய்துள்ளது என்பது முக்கியமானது. இதன் காரணமாக அவர் மீது காரசாரமான எதிர் விமர்சனங்கள் வைக்கப்படுவது மட்டுமன்றி அரசு தரப்பிலிருந்து அவர்மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்திய வரலாற்றில் சோழ மன்னர்களின் பாத்திரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சங்க காலம் தொடக்கம் தமிழ்நாட்டின் பல பகுதிகளை இந்த சோழர்கள் ஆண்டு வந்துள்ளனர். கிறிஸ்துவுக்கு முற்பட்ட மௌரிய பேரரசர் அசோகன் காலத்து கல்வெட்டுக்களில் கூட தென்னிந்திய சோழமன்னர்கள் பற்றிய குறிப்புகளுண்டு. சங்ககால இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை கூட சோழமன்னர்கள் பற்றிய கதைகளால் நிறைந்தவையாகும்.

தென்னிந்தியாவை சேரர்கள், பாண்டியர்கள், முத்தரையர்கள், களப்பிரளர்கள், பல்லவர்கள் என்கின்ற வேறு பல மன்னர் பரம்பரைகளும் ஆட்சி செலுத்தி வந்துள்ளன. ஆனபோதிலும் சோழ மன்னர்களின் வரலாறு நீண்ட வரலாற்று பாரம்பரியம் மிக்கதாகும். இதில் சோழ சாம்ராஜ்யம் எனப்படுவது பிற்கால சோழராட்சியே ஆகும். இது தொடர்ச்சியான சுமார் நான்கு நூற்றாண்டுகள் அதாவது 430 ஆண்டுகள் பிரமாண்டமான வரலாற்றை கொண்டது. இந்தச் சோழ சாம்ராஜ்சியமானது 850ஆம் ஆண்டு தொடங்கி 1279ஆம் ஆண்டு வரை நிலைத்திருந்தது. இந்த சாம்ராட்சியத்தின் அடையாளமாகவே இராஜராஜ சோழன் என்பவன் திகழ்கின்றான். இவனது ஆட்சிக்காலம் 985-1014 வரையானதாகும். இராஜராஜ சோழனும் அவனது மகனான இராஜேந்திர சோழனும் சேரநாடு, பாண்டியநாடு, மற்றும் இலங்கை போன்றவற்றை வென்று கொடிநாட்டினர். இலங்கையில் பொலன்னறுவையை தலைநகராக கொண்டு சோழராட்சி நிலைகொண்டிருந்தது.

தென்னிந்தியாவை மட்டுமன்றி வடக்கு நோக்கி ஒரிசாவையும் தாண்டி பாடலிபுரம் (இன்றைய பீகார்) போன்ற பல பகுதிகளை வென்றனர். ஜாவா, சுமத்ரா, மலேசியா (கடாரம்)என்று தென்கிழக்காசியாவின் பல நாடுகளுக்கும் படையெடுத்துச் சென்று சோழராட்சியை நிறுவினார். இதன்காரணமாகவே 'கங்கை கொண்டு கடாரம் வென்ற சோழன்' என பெயர்பெற்றான் இராஜராஜன்.

இராஜராஜ சோழன் ஆட்சியில்தான் முதன் முதலாக நிலங்களை அளந்து கணக்கிடும் முறை உருவானது. குடவோலை எனப்படுகின்ற வாக்களிக்கும் முறையூடாக



மக்களை வாக்களிக்க செய்து உள்ளூராட்சி நிர்வாகத்தை தெரிவு செய்கின்ற ஜனநாயக பாரம்பரியத்தை உருவாக்கியவன் இந்தச் சோழனே. மிகப்பெரிய நீர்த்தேக்கங்கள், தஞ்சை பெருங்கோவில் போன்ற பிரமாண்டமான ஆலயங்கள் போன்றவற்றை நிர்மாணித்து தமிழரின் தொன்மையான தொழில் நுட்ப அறிவை உலகறியச்செய்தவன் இராஜராஜனே. படை நடத்துவதில் மட்டுமன்றி கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், தொழில் நுட்பம் போன்ற அனைத்து துறைகளிலும் பெயர் பொறித்த ஆட்சி முறையை தந்தவன் சோழன் என்கின்ற சாதனைகளே வரலாற்றில் முன்னிறுத்தப்பட்டு வந்துள்ளன.

இந்த வரலாற்றுப் பெருமிதங்கள் மட்டுமே கதைகளாகவும், சினிமாக்களாகவும் பள்ளிப் பாடங்களாகவும் பரம்பரை பரம்பரையாக எமக்கு சொல்லித்தரப்பட்டு வருகின்றன. சோழ மன்னர்களின் வரலாற்று பெருமைகளோ இராஜராஜ

**அறுமக்குட்டிபோடி**

சோழனின் சாதனைகளோ யாராலும் மறுக்கப்படுவதற்கில்லை. ஆனால் எழுதப்பட்ட வரலாறுகள் என்பது ஆதிக்கசக்திகளின் வரலாறுகளாகவே இருக்கும் என்பதுதான் நியதி.

அப்படிப் பார்க்கின்றபோது சோழர்கள் போன்ற பெருமன்னர்களின் வரலாறுகளாக எமக்கு கிடைக்கின்ற கல்வெட்டுக்களும், அல்லது இலக்கிய பதிவுகளும் அந்தந்த மன்னர்களாலும் மன்னர்களுக்காகவுமே எழுதப்பட்டன. அதில் ஒருபோதும் அவர்களின் மறுபக்கங்களை அவர்கள் எழுதி வைக்கமாட்டார்கள். தங்கள் அருமை பெருமைகளை பேசுவதற்காகவே அவர்கள் கல்வெட்டுக்களை உருவாக்கினார்கள். புலவர்களை பொன்னும், மணியும்,பொற்கிழியும் வழங்கி போஷித்தார்கள். எனவே இந்த வரலாறுகள் ஒரு போதும் அவர்களது தவறுகளையோ, பிழைகளையோ அவர்களால் பாதிப்புற்ற மக்கள் கூட்டத்தின் மனவேதனைகளையோ பேசுவதில்லை. ஆனாலும் வரலாற்று ஆய்வாளர்கள் என்பவர்கள் அந்த வரலாற்று தடயங்கள் சொல்லவருகின்ற விடயங்களை மொழிபெயர்ப்பது, அல்லது ஒப்புவிப்பது மட்டுமன்றி அவற்றில் மறைந்திருக்கக்கூடிய சொல்லாமல் விடப்பட்ட விடயங்களை நுணுகி ஆராயவேண்டிய தேவைகள் உண்டு. அப்படியான தேடல்கள்தான் வரலாற்றின் முழுமையான பக்கங்களை புதிய தலைமுறையினர் தரிசிக்கும் வாய்ப்புகளை வழங்கும். எனவே இந்த பெருமைகளையும் சாதனைகளையும் ஒரு புறம் வைத்துவிட்டு ஜனநாயக தன்மையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் வரலாற்றை நாம் அணுகி ஆராய்கின்ற போதுதான் அதன் மறுபக்கங்களை காணமுடியும்.

## சமஸ்கிருதம்

சோழராட்சிக்காலத்தில் பூசை மொழியாக சமஸ்கிருதம் நிரந்தரமாக்கப்பட்டது என்பதில் ஒரு தமிழனாக நாம் பெருமைகொள்ள ஏதும் இல்லை. அருள்மொழித்தேவன் தனது சொந்தப்பெயரையே இராஜராஜன் என்று சமஸ்கிருதத்தில் புனைந்துகொள்ளும் அளவிற்கு பிரமணமயமாக்கல் இடம்பெற்றமை நமக்கு பெருமையல்ல, சிறுமையே. சோழர்காலக் கல்வெட்டுகளில் வலங்கைச்சாதி, இடங்கைச்சாதி என்று தலா 90 சாதிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு தீண்டாச்சேரி, பறைச்சேரி என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருகின்றன. ஆகவே சாதிவாரியாக சேரிகளும், ஊர்களும் வெவ்வேறு வாழ்விடங்களாக அமைக்கப்பட்டிருந்த ஆட்சிமுறை போற்றத்தக்கதொன்றா?

தொடர்ச்சி... (பக்கம் -15)

# பாட்டும் நானே ..பாவமும் நானே (பகுதி -2)

## டி .எம்..சௌந்தரராஜன் : சில நினைவுக் குறிப்புகள் (1922-2013 )



தமிழ் சினிமா ரசிகர்கள் - நடிப்பாகட்டும்,பாடல்களாகட்டும், வசனங்களாகட்டும் இசையாகட்டும் - சற்று உரத்த தொனியை விரும்புபவர்கள். நாகரிகப் பாங்கும், மிகை வெளிப்பாடும் கொண்ட சிவாஜி கணேசன் ஒரு புறம், சாகச நாயகன் எம்.ஜி.ராமச்சந்திரன் மறுபுறம். இந்த இரண்டு நட்சத்திர நடிகர்களுக்கும் ஈடு கொடுத்த சமாந்தரப் பயணம் டி.எம். எஸ். ஸினுடையது.

தெளிவான உச்சரிப்பு, உரத்த தொனி, கம்பீரம், திரைப்படப் பாடல்களுக்கு உயிரூட்டும் 'குரலின் நடிப்பு ' ஆகியவை டி.எம்.எஸ்.ஸின் பிரத்தியேகப் பலங்கள். அடிப்படையில் அவர் எம்.கே.தியாகராஜ பாகவதர் பரம்பரையைச் சேர்ந்த பாடகரேதான். ஆனால் திரையிசையில் நிகழ்ந்த மாற்றங்கள் - முக்கியமாக விஸ்வநாதன்-ராமமூர்த்தி இரட்டையர்களின் கர்நாடக- மேற்கத்திய கலப்பிசைப் பாணியில் உறவான மெல்லிசைக் கோலங்கள் அவரைப் புதிய திசைக்கு இட்டுச்சென்றன.

எம்.ஜி.ஆர்.,சிவாஜி என்ற இரு முக்கிய நட்சத்திரங்களுக்குமான தவிர்க்க முடியாத ஒரு பாடகராக குறிப்பிட்ட காலம் வரை அவர் மாறியிருந்தார். இரண்டு நாயகர்களும் இளவயது நாயகிகளை நாடிச் சென்ற போது கூடவே அவர்களுக்கு இளைய குரல்களும் தேவைப் பட்டன. டி .எம். எஸ். மெல்ல மெல்ல ஓரங்கட்டப்பட்டார். இளையராஜாவின் எழுச்சிக்குப் பின், இரு தலைமுறைகளின் சகிப்பின்மை காரணமாக, மாறி வந்த சூழலின் நிமித்தம் அவர் ஒரு 'பழைய பாடகர்' ஆக்கப் பட்டார் என்றே சொல்ல வேண்டும். தப்பித் தவறி அவரைப் பயன்படுத்த முனைந்தவர்களும் 'நான் ஒரு ராசியில்லா ராஜாவை' அவரைக் கொண்டு பாட வைத்ததைக் காலத்தின் கோலம் என்றே சொல்ல வேண்டும்.

எழுத்தாளர் எம் வீ. வெங்கட்ராம் அவர்களின் தாய் மொழி சௌராஷ்டிராவாகா இருந்துங் கூட தமிழ் இலக்கியத்தில் எவ்வாறு முத்திரை பதித்தாரோ அதேபோன்றதுதான் இசைத்துறையில் டி .எம் எஸ். அவர்களின் சாதனையும். இருவருமே தமிழை மிகவும் சிறப்பாகக் கையாண்ட சௌராஷ்டிரர்கள் .

மலைக்கள்ளன், தூக்குத்தூக்கி, தாய்க்குப் பின் தாரம், மதுரை வீரன் , உத்தமபுத்திரன், அம்பிகாபதி, சாரங்கதாரா, காத்தவராயன், நாடோடிமன்னன் படப்பாடல்கள் மூலம் ரசிகர்களின் கவனத்தைக் கவர்ந்த டி.எம். எஸ்.ஸை அறுபதுகள் உச்ச நிலைக்குக் கொண்டு போய் நிறுத்தியது.

விஸ்வநாதன்-ராமமூர்த்தி இரட்டையர்களின் இசையமைப்பில் மறக்க முடியாத பல பாடல்களை அவர் பாடிய காலம் இது. பாசமலர், பாலும் பழமும், பாவ மன்னிப்பு, [1961],ஆலயமணி, நிச்சயதாம்பூலம், படித்தால் மட்டும் போதுமா, பந்தபாசம், பலே பாண்டியா,பார்த்தால் பசி தீரும் [1962],பணத்தோட்டம்[1963], என் கடமை, கர்ணன்,கை கொடுத்த தெய்வம்,தெய்வத் தாய், பச்சை விளக்கு, படகோட்டி, பணக்காரக் குடும்பம்,புதிய பறவை [1964],

**உமா வரதராஜன்**

ஆயிரத்தில் ஒருவன், எங்க வீட்டுப் பிள்ளை, கலங்கரைவிளக்கம், பணம் படைத்தவன், பழனி [1965], அன்பே வா, சந்திரோதயம், நான் ஆணையிட்டால், பறக்கும் பாவை, பெற்றால்தான் பிள்ளையா, மகா கவி காளிதாஸ்[1966], ஊட்டி வரை உறவு, நெஞ்சிருக்கும் வரை [1967], உயர்ந்தமனிதன் எங்க ஊர் ராஜா, என் தம்பி, ஒளி விளக்கு, கண்ணன் என் காதலன், குடியிருந்த கோயில் [1969],எங்க மாமா, எங்கிருந்தோ வந்தாள், ராமன் எத்தனை ராமனடி, வியட்னாம் வீடு இப்படி நீண்டு செல்லும் ஒரு பட்டியல் அது. இந்தக் கால கட்டத்தில் இது தவிர பிற நடிகர்களுக்காகவும், இசையமைப்பாளர்களுக்காகவும் கூட அவர் சிறப்பான பாடல்களைப் பாடி இருக்கிறார்,


அன்பின் பரவச நிலையையும், முதிர்ச்சியின் பக்குவத்தையும், தத்துவ சாரத்தையும், நவரசங்களையும் அவர் அநாயசமாகத்

தொடர்ச்சி... (பக்கம் -15)

# கெப்டன் ரிபைரோ : போர்த்துக்கேய - யாழ்ப்பாண வீழ்ச்சியின் சாட்சியம்



பட்டறிவு





இலங்கை பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை விட்டுச்சென்ற காலனித்துவகால மேற்கத்தேயவர்களில் ரொபர்ட் நொக்ஸ், ஜோன் டேவி, ஜோன் டொயிலி, சோவர்ஸ்,ஹூக் நெவில், டர்னர், கல்வின், ரிவர்ஸ், லொவி, ஹர்ஷோத், பால்தேயு போன்றவர்கள் வரிசையில் கெப்டன் ஜொவாவோ ரிபைரோவுக்கும் (Captain Joao Ribeiro 1622-1693) முக்கிய இடம் உண்டு. மேற்குறிப்பிட்டவர்களில் ரிபைரோ மிகவும் முதன்மையான, பழமையானவரும் கூட. இலங்கையின் வரலாற்றுப் பாட நூல்களிலும் இடம்பெற்றிருப்பவர். இலங்கையில் இரண்டாம் இராஜசிங்கனின் காலகட்ட போர்க்காலத்தில் போர்த்துக்கேய கப்டனாக இருந்தவர். இராணுவச் சேவையில் நாற்பது ஆண்டுகாலம் பணிபுரிந்த ரிபைரோ இலங்கையில் 1640-1658 வரையான 18 ஆண்டுகாலம் அதாவது 1658இல் ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்வரை இருந்தார்.

தனது இறுதிக் காலத்தில் அவர் 1685 இல் “Fatalidade Histórica da Ilha de Ceilão” என்கிற தலைப்பில் போர்த்துகீச மொழியில் எழுதினார். இலங்கையின் வரலாற்றை கற்பவர்களின் மூல நூல்களின் வரிசையில் உள்ளது இந்த நூல்.

போர்த்துக்கேயர் இலங்கையை ஆக்கிரமித்த ஆண்டு 1505. ஒன்றரை நூற்றாண்டு காலத்தில், கரையோரப் பகுதிகளை ஆட்சிசெய்து வந்த அவர்கள் படிப்படியாக ஒல்லாந்தரிடம் தமது ஆட்சியைப் பறிகொடுத்தனர். 1640 இல் அவர் போர்த்துக்கல் – லிஸ்பன் நகரிலிருந்து இந்தியா வந்து சேர ஆறு மாதங்கள் எடுத்திருந்தன. நீர்கொழும்பு, காலி போன்ற பிரதேசங்களை அப்போது போர்த்துகேயர் ஒல்லாந்தரிடம் இழந்திருந்தனர். எஞ்சிய பிரதேசங்களின் மீது சமர்கள் தொடர்ந்து கொண்டிருந்தபோதுதான் கெப்டனாக ரிபைரோ பதவி வகித்தார். ஆகவே போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரிடம் இலங்கை பறிபோன நிலைமாறுகாலத்தின் காலக்கண்ணாடி என்றும் நேரடி சாட்சியம் என்றும் நாம் ரிபைரோவைக் கொள்ளலாம். எனவே இந்த நூல் முக்கிய ஆதார நூல்.

இந்த நூல் குறித்து ஆராயத் கொடங்கியபோது கண்டெடுத்த



HISTOIRE DE L'ISLE DE CEYLAN,
Ecrite par le Capitaine JEAN RIBEYRO, & presentée au Roy de Portugal en 1685.
Traduite du Portugais en François.
A PARIS,
Chez JEAN BOUDOT, Libraire de l'Academie Royale des Sciences, rue S. Jacques, au Soleil d'or.
M. DCCI.
Avec Approbation & Privilege.

HISTORY OF CEYLON
PRESENTED BY CAPTAIN JOHN RIBEYRO TO THE KING OF PORTUGAL, IN 1685,
TRANSLATED FROM THE PORTUGUESE, BY THE ABBE LE GRAND.
RE-TRANSLATED FROM THE FRENCH EDITION:
WITH
AN APPENDIX,
CONTAINING CHAPTERS ILLUSTRATIVE OF THE PAST AND PRESENT CONDITION OF THE ISLAND,
BY
GEORGE LEE
POSTMASTER-GENERAL OF CEYLON, FELLOW OF THE UNIVERSAL STATISTICAL SOCIETY OF FRANCE, &c. &c.
CEYLON,
PRINTED AT THE GOVERNMENT PRESS, COLOMBO,
MDCCCXLVII.

The Historic Tragedy
OF THE ISLAND OF
CEILÃO
DEDICATED TO HIS MOST SERENE MAJESTY
DOM PEDRO THE SECOND
King of Portugal, Our Lord
WRITTEN BY
CAPTAIN JOÃO RIBEIRO
TRANSLATED FROM THE PORTUGUESE BY
P. E. PIERIS
Dissanayaka Samarasinha Sriwardhana, Litt. D. (Cantab.)
Fourth Edition

முக்கிய சில விடயங்களை வரலாற்றை ஆய்பவர்களுக்கு வெளிபடுத்த தோணிற்று.

1701இல் இந்த நூல் பிரெஞ்சு மொழியில் பாரிசில் வெளியானது. பிரெஞ்சு மொழியிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட பிரதி MDCCCXLVII ஆம் ஆண்டு (1847) கொழும்பில் வெளியானது. இந்த நூல் மூலப் பிரதியினை திரிபுபடுத்தி, நாசப்படுத்தப்பட்ட நூல் என்பதை போட்டு உடைத்தவர் டொனால்ட் பெர்குசன். 1890இல் ரோயல் ஆசிய கழகம் - இலங்கைக் கிளையால் (Royal Asiatic society - CEYLON BRANCH) வெளியிடப்பட்ட சஞ்சிகையில் Captain Joao Ribeiro என்கிற கட்டுரையில் அவர் அதில் உள்ள கயமைகளை வெளியிட்டார். இந்த விபரங்களையும் உள்வாங்கிக் கொண்டு பீரிஸ் (P.E. Pieris) மொழிபெயர்த்த மூல நூலின் ஆங்கிலப் பதிப்பு “The Historic Tragedy of the Island of Ceilão” 1909 தான் வெளிவந்தது. அதன் பின்னர் 1948 இலும் அது கொழும்பில் மீளவும் பதிப்பிடப்பட்டது. அந்த நூலிலும் மூல நூலின் சிக்கல்கள் போதுமான அளவு அவிழ்க்கப்படாததால் C.R.Boxer இது பற்றி ஆராய்வதற்காக ரிபைரோவின் ஊருக்கு பயணித்தார். ரோயல் ஆசிய கழகத்தினால் 1955இல் வெளிக்கொணரப்பட்ட சஞ்சிகையில் அவர் ஆராய்ந்து வெளியிட்ட பெரிய ஒரு கட்டுரையை வெளியிட்டார்.

இந்த நிலையில் வரலாற்றாய்வாளர்கள் பலர் இந்த குழப்பங்களை சில சமயங்களில் அறியாத நிலையில் பிரெஞ்சு மொழி பதிப்பையும், அதன் மொழிபெயர்ப்பான “History of Ceylon presented by captain John Ribeyro to the King of Portugal, in 1685, translated from the Portuguese, by the Abbe Le Grand” நூலைக் கையாண்டு வருவதைக் காண முடிகிறது. தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிப்பு என்பது இறுதியாக பீரிஸ் (P.E. Pieris) வெளியிட்ட பிரதி தான். அந்தப் பிரதி கூட பல பதிப்புகளைக் கடந்துவிட்டது.

இந்த நூலில் ரிபைரோ எழுதிய பல குறிப்புகள் ஆய்வுகளுக்குப் பயனுள்ளது. கொழும்பு கோட்டை உருவான கதை, கொழும்பின் உருவாக்கம் பற்றி அறிவதேன்றால் ரிபைரோவின் குறிப்புகளை கட்டாயம் அறிதல் அவசியம். கொழும்பு கோட்டையை கட்டுவிக்க அக்காலப்பகுதியில் வேடுவர்களின் உழைப்பும் பெறப்பட்டதாக குறிப்பிடுவதுடன் யாழ்ப்பாணப் பட்டினத்தின் கீழ் செறிவான வனக்காடுகளாக இருந்த வன்னி, திருகோணமலைப் பகுதியையும் அதன் கடற்பகுதிகளையும் வேடுவர்களின் சாம்ராஜ்ஜியமென்கிறார். விலங்குகளின் தோல்களை அணிந்திருந்த அவர்கள் போர்த்துக்கேயர்களின் நிறத்துக்கு சமானமாக காணப்பட்டார்களென்றும், வேட்டையாடப்படும் விலங்குகளை தேனில் துவைத்து உண்பவர்களென்றும், ஒரே இடத்தில் ஆறு மாதத்துக்கு மேல் தங்கியிருப்பதில்லை என்றும் குறிப்பிடுகிறார்.

போர்த்துக்கேயரின் பிடியில் இருந்த யாழ்ப்பாணத்தை மீட்க 1629 ஆம் ஆண்டு அத்தபத்து முதலியார் தலைமையிலான 5000 பேரைக் கொண்ட சிறப்புப்படையணி சமரிட்டு விடுவித்தது. பின்னர் போர்த்துக்கேயர் பத்தாயிரம் படையினருடன் சென்று யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றி அத்தபத்துவின் தலையை வெட்டி யாழ்ப்பாணத்தில் ஊர்வலமாக எடுத்துச் சென்று காட்சிப்படுத்திய கதையை அறிந்திருப்போம். 13 நாட்களில் ஐயாயிரம் பேரை பலிகொடுத்த அந்தப் சமர் குறித்த ஆரம்பத் தகவல்கள் பல இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் போர்த்துகேய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்த அந்த சமர் அன்றைய “முள்ளிவாய்க்கால் சமர்”

என்.சரவணன்

என்றே குறிப்பிடவேண்டும். அங்கு நிகழ்ந்த கொடூரமான அழிவுகளை அவர் பதிவுசெய்திருகிறார்.

1638-1640 காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப்பகுதிகளை ஆக்கிரமித்திருந்த போர்த்துகேயரின் படைகளுக்குப் பொறுப்பாக இருந்த கெப்டன் ஜெனரல் அந்தோனியோ மஸ்கரஞ்ஞஸ் (Dom Antonio Mascarenhas) போர்த்துகேய படையில் உள்ள அத்தனை சிப்பாய்களும் புகைபிடிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தாக அவரது இந்த நூலில் குறிப்பிடுகிறார். சின்னம்மை போன்ற ஒரு குறிப்பிட்ட வகை நோய்க்கு நிவாரணமாக புகையிலை இருந்ததாகவும் யுத்தகாலங்களில் புகையிலையின் விலை அதிகரித்ததாகவும் இந்தக் காலப்பகுதியில் இருந்துதான் இலங்கையில் புகையிலைச் செய்கை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

1639இல் திருகோணமலையையும், 1640இல் நீர்கொழும்பு காலியையும், 1655இல் களுத்துறையையும், 1656இல் கொழும்பையும் 1658இல் இறுதியாக மன்னாரையும், யாழ்ப்பாணப் பட்டினத்தையும் போர்த்துக்கேயர்கள் ஒல்லாந்தர்களிடம் இழந்தார்கள். கொழும்பு தாக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களில் ரிபைரோ கடும் காயங்களுக்கு உள்ளாகியிருக்கிறார். கொழும்பில் நிகழ்ந்த இறுதிச்சண்டையில் ரிபைரோ எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் எஞ்சிய படையினருடன் பின்வாங்கி கடல் மார்க்கமாக தென்னிந்திய கோவாவில் நிலைகொண்டிருந்த படையிடம் போய் சேர்ந்தார். பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்து யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டு போர்த்துகேய படைகள் கைதுக்குள்ளான போது காயப்பட்டிருந்த ரிபைரோவும் கைதியானார். அங்கிருந்து அன்றைய டச்சு கிழக்கிந்திய கம்பனியின் தலைமையகம் இயங்கிவந்த பட்டவியாவுக்கு (இன்றைய இந்தோனேசியாவிலுள்ள ஜகார்த்தா) கைதியாக அனுப்பட்டார். ஒரு வருடத்தின் பின்னர் ஒல்லாந்துக்கு கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டு 1660இல் சொந்த நாடான போர்த்துக்கலை அடைந்தார்.

# அளவுக்கு மிஞ்சினால்....

## இணைய அடிமையாதல் எனும் மெல்லக்கொல்லும் விஷம்



இந்தக் கட்டுரையை வாசிக்க முன், இந்தக் கட்டுரையாளனாக ஒரு சுய விளம்பரம் செய்து கொள்ள வேண்டும். சைவ சமயம் மற்றும் அதன் வரலாறு பற்றிக் கூறுகின்ற கடந்த ஒக்டோபர் மாதம் வெளியான 'அலகிலா ஆடல்' எனும் நூலின் ஆசிரியன் நான். 'இருந்திற்றுப் போ, எங்களுக்கென்ன' என்று நீங்கள் கேட்கலாம். ஊகூம். அதில் தான் விடயமே இருக்கிறது.

பல்கலைக்கழக வாழ்க்கை முடிந்த ஐந்தாறு மாதங்களின் பின்னர், பகுதி நேர வேலையொன்றை வீட்டிலிருந்து செய்து கொண்டிருந்த காலத்தில் தான் அலகிலா ஆடலை எழுத ஆரம்பித்தேன். நூற்றுக்கணக்கில் தரவிறக்கி வைத்திருந்த ஆங்கில ஆய்விதழ்களை வாசிப்பது, அவற்றை தமிழில் மொழியாக்குவது, பின்னர் தலைப்புக்கேற்ப வகைபிரிப்பது, இறுதியாக மொழியாக்கத்தை கொஞ்சம் மாற்றி, நூலின் ஒழுங்கு சிதையாத விதத்தில் திருத்தி எழுவது என்று அந்த நாட்கள் கழிந்துகொண்டிருந்தன.

ஒரு விடயத்தில் ஆர்வம் ஏற்பட்டு விட்டால், அது நம்மை எப்படி முழுமையாக ஆட்கொண்டு விடும் என்பதை நான் உணர்ந்துகொண்ட நாட்கள் அவை. காலையில் ஏழரை, எட்டு மணியளவில் தான் எழுவேன். நான் செய்துகொண்டிருந்த பகுதிநேர வேலைக்கு ஒரு நாளில் இரண்டு அல்லது குறைவான நேரமே எடுக்கும். எப்படியும் ஒன்று, ஒன்றரை மணிநேரத்தில் அதை செய்து முடித்து விட்டு மடிக்கணினியில் அமர்ந்தால், பெரும்பாலும் மாலை வரை அசைவதில்லை.

இரண்டுவேளைச் சாப்பாடும் இடையிடையே தேநீரும் அம்மா தயவில் மேசைக்கே வரும். 'ஒரே கொம்பியூட்டருக்கு முன்னுக்கு இரிக்காத தம்பி. கண் பழுதாப்போயிரும்' என்ற பல்லவியோடே அவர் வந்து சாப்பாட்டை வைத்து விட்டுப் போவதும் நான் ஒற்றைக்கையால் தட்டச்சிக்கொண்டே சாப்பிடுவதும் இயல்பாக நடந்து முடிக்கும். ஒருநாள் மடிக்கணினியைத் திறந்தால் விசைப்பலகை முழுவதும் எறும்புகள். பூந்தி சாப்பிட்டுவிட்டு கை கழுவ மறந்துபோய் அப்படியே தட்டச்சிக்கொண்டு இருந்திருக்கிறேன்.

மாலையில் வழக்கமான நண்பர் கூட்டத்துடன் சிறு குலாவல். அல்லது கடற்கரையில் கொஞ்ச தூரம் நடை. இரண்டையும் அவசர அவசரமாக முடித்து விட்டு மீண்டும் ஓடி வந்து மடிக்கணினி முன் அமர்ந்து விடுவேன். 'இருடா எங்க அவசரமா ஓடுறாய்' என்று கேட்பார்கள் நண்பர்கள். என் அவசரம் அவர்களுக்கு எங்கே தெரியப்போகிறது. புத்தகத்தை எழுதி முடிக்க வேண்டுமே!

மாலையில் அமர்ந்தால், இரவு ஒன்பது, பத்து மணி வரை மீண்டும் எழுத்துப்பணி. இரவுச் சாப்பாட்டுக்கு மட்டும் மண்டபத்தில் குடும்பத்தோடு அமர்ந்து தொலைக்காட்சி பார்ப்பேன். அந்த இடைவேளையில் இரண்டு வயதாகும் மருமகளுடன் நேரத்தை அளந்து கொஞ்சம் விளையாடுவேன். 'வீட்ட சும்ம தானே இருக்காய் இவள்ர முகத்த பாத்துக்கொண்டு கொஞ்ச நேரம் கூட தூக்கி விளாடாமல் கொம்பியூட்டர்ட்ட ஓடுறியே' என்று திட்டுவாள் அக்கா. அதைக் காதிலே போட்டுக்கொள்ளாமல் மீண்டும் கணினி முன் அமர்ந்துவிடுவேன்.

இரவு இரண்டு மணி வரை கூட எழுத்து தொடரும். சிலவேளை அதிகாலை மூன்று, மூன்றரை மணிக்கு அப்பா அறைக்குள் நுழைந்து போய்த்தூங்கு என்று சொல்லித் திட்டி விட்டுப் போனதும் நடந்திருக்கிறது. அடுத்த வளவில் இருக்கும் அம்மம்மாவும் சித்தியும் 'விடிய விடிய அறைக்குள் லைற் பத்துது. இவன் படுக்கிறதே இல்ல' என்று வீட்டில் வந்து குற்றப்பத்திரிகை வாசித்து விட்டுச் சென்றதுண்டு. அவர்கள் யாருக்குமே நான் ஏன் அப்படி கண் விழித்து கணினி முன் அமர்ந்திருந்தேன் என்பது தெரியாது. நான் புத்தகம் எழுதுகிறேன் என்ற விடயத்தை அவர்களிடம் அப்போது சொல்லவும் இல்லை.

உட்கார்ந்தபடியே பல்கலைக்கழகம் போய் துரும்பாய் மெலிந்த உடலை பழையபடி மீட்டேன். கண்களின் கீழ் கருவளையம் வந்தது. கிட்டத்தட்ட பைத்தியம் பிடித்தது போலத்தான். இருபத்து நான்கு மணிநேரமும் 'சைவம், வரலாறு, சைவம், வரலாறு' என்றே மூளை உச்சரித்துக் கொண்டிருந்தது.

**வி.துலாஞ்சனன்**

சுமார் மூன்று மாதங்களின் பின், சுகாதார அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நீரிழிவுச் செயற்றிட்டமொன்றில் வேறொரு வேலை கிடைத்தது. அப்போது நூல் வேலையும் பெருமளவு நிறைவுபெற்றிருந்தது. இனி மெய்ப்புப் பார்ப்பது, உசாத்துணைகளை படங்களைச் சேர்ப்பது என்பன மட்டுமே எஞ்சிய வேலை என்றானது. எனவே பழையபடி மீள ஆரம்பித்திருந்தேன்.

அந்த நூல் பிறகு வெற்றிகரமாக வெளியான நாள், கொழும்பிலும் மட்டக்களப்பிலும் விமரிசையாக இடம்பெற்ற அந்த நூல் வெளியீடு, அதற்குத் தோள் கொடுத்த நண்பர்கள், உறவினர்கள், எல்லோரையும் எல்லாவற்றையும் இப்போதும் ஓய்வு நேரங்களில் எண்ணிப்பார்த்து இறும்பூது எய்துவதுண்டு. ஆனால், அதற்கெனச் செலவழித்த மேற்படி நாட்கள் இன்றும் எனக்கு அச்சமூட்டுகின்றன.

ஒன்றை நேசிப்பதற்கும் ஒன்றுக்கு அடிமையாவதற்கும் மிகச்சிறிய நூலிழை வேறுபாடு தான் இருக்கிறது. அந்த மூன்று மாதங்களும் நான் எழுத்துக்கு அடிமையாகி இருந்தேன். அது இன்பமூட்டுவதாக இருந்தது. மிகப்பெரிய போதையைத் தந்துகொண்டிருந்தது. புதிய புதிய விடயங்களை வாசித்து அறிந்துகொண்ட போது உடல் சிலிர்க்கும். 'அப்படியா, இப்படியா' என்று மகிழ்ச்சி வெள்ளம் பெருகியோடும். வரலாற்று மர்மங்களை சிந்தித்த போது மூளையில் மின்னல் வெட்டும். வரலாற்றின் சிண்டு முடிச்சுகளை நானாகவே அவிழ்த்த போது, 'ஆஹா, கண்டுபிடித்து விட்டேன்' என்று உள்ளம் குதூகலிக்கும்.

நாளெல்லாம் போதையில் திளைப்பவன் ஒருவனை அழைத்து நாலு சாத்து சாத்தி, 'பைத்தியக்காரா, உன்னுடையது என்ன போதை, இதை வாசி, இதை விட இன்ப மயக்கம் தரும் வேறொன்று உள்ளதா இந்த உலகில்? இது தெரியுமா உனக்கு? இதை அறிந்திருக்கிறாயா? ஐயோ, முட்டாள், இந்த சொர்க்கத்தைத் தெரியாமல் இருக்கிறாய் தெரியுமா?' என்று கூவவேண்டும் போல் இருக்கும். இப்போது அந்த நாட்களை எண்ணும் போது, குலை நடுங்குகிறது. ஆம், அந்த மூன்று மாதங்களின் உழைப்பு வீண் போகவில்லை என்பது உண்மை தான். நூலை இயல்பான வாழ்க்கையில் சாதாரணமாக முடிக்க அதற்குப் பிறகு மேலதிகமாக ஏழெட்டு மாதங்களே எடுத்துக்கொண்டன. 'எழுதி முடிக்க ஓராண்டு கூட எடுக்கவில்லையா?' என்று நூலை வாசித்த பலர் கேட்டு வியந்து கொண்டார்கள் தான். ஆனால், அதற்காக நான் கொடுத்த விலை? எத்தனை இரவு - பகல்கள்? எத்தனை முழுநிலவின் அழகுகள்? எத்தனை அதிகாலைகள்? எத்தனை நண்பர்கள்? எத்தனை பொழுதுபோக்குகள்?

இன்று உளநலன், உளவியல் சுகாதாரம் பற்றிய விவாதங்களில் 'அடிமையாதல்' ( ஆங்கிலத்தில் 'Addiction') என்பது முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்த உலகில் எந்தப் பழக்கத்துக்கும் மனிதன் இலகுவில் அடிமையாகலாம். ஆம், வாசிப்பவனை பூரணமாக்கும் வாசிப்பினால் கூட ஒரு மனிதனை அடிமையாக்க முடியும்!

மது, மாது, போதை, என்று பல விடயங்களுக்கு அடிமையானவர்கள் பற்றி பல இடங்களிலும் நீங்கள் வாசித்திருக்கலாம். ஆனால் இப்போது மிக மோசமாக இளைய தலைமுறையினரை மோசமாக்கும் அடிமையாக்கல் பற்றி நாம் யாரும் அலட்டிக்கொள்வதில்லை. அது இணையத்தின் அடிமையாக்கல்.

என் நண்பர்களில் கணினி விளையாட்டுக்கு அடிமையானவர்களை எனக்குத் தெரியும். இப்படியே கைபேசி, பேஸ்புக், வட்சப் போன்ற சமூகவலைத்தளங்களுக்கு நம்மில் பலர், சொல்லப்போனால் ஒவ்வொருவருமே அடிமையாகி இருக்கிறோம்.



அதில் தவறேதும் இல்லை. கணினி, இணையம், காணொளி விளையாட்டுக்கள் உருவாக்குகின்ற மெய்நிகர் உலகமானது (Virtual World) நம்மால் கனவுகளில் மட்டுமே உலவ முடிந்த ஒன்று. இன்றைய தொழில்நுட்பம், அந்தக் கனவுகளில் உண்மையாகவே உலவி வரும் வாய்ப்பை இலகுவாக்கி இருக்கிறது. நம் கனவு தருகின்ற சுவாரசியமும் மெய்யான உணர்வுகளும் அங்கும் உருவாகின்றன. எனவே அதில் திளைக்கிறோம், மகிழ்கிறோம், வெளியேறியதும் மீண்டும் அது வேண்டுமென்று ஏங்குகிறோம், கிடைத்ததும் குதூகலிக்கிறோம். அது மெல்ல நம்மை ஆட்கொள்கிறது. இறுதியில் அடிமையாக்குகிறது. ஒரு பழக்கத்துக்கு அடிமையாகி இருக்கிறோம் என்பதை அறிய என்ன வழி? அது நம் அன்றாட இயல்பான வாழ்க்கைக்கு தடையாக இருக்கும். அதன் காரணமாகவே நீங்கள் செய்ய வேண்டிய ஒரு வேலையை காலதாமதமாகச் செய்வீர்கள். பிறருடன் கலந்து மகிழ்வதில் இருந்து விலகி இருப்பீர்கள். அருகில் மனதுக்கு இனியவர்கள் அமர்ந்திருக்கும் போதும், உங்களை அடிமையாக்கிய பழக்கத்தைச் சுற்றியே மூளை சிந்தித்துக்கொண்டிருக்கும். களைப்பு, பொறுமையின்மை, மன அழுத்தம் முதலிய உணர்வுகள் ஏற்படும் போது, உடனே அதைத் தேடி ஓடுவீர்கள், அல்லது அதை மீண்டும் அடைய ஏங்குவீர்கள். இவற்றில் ஏதாவதொன்று உங்களிடம் இருந்தால், உங்கள் கதை முடிந்தது. ஆம் நீங்கள் அடிமையாகிவிட்டீர்கள்.

இன்றைய தலைமுறையினருக்கு உளரீதியான மெய்நிகர் இணைய உலகமும் மிகப்பெரிய அடிமையாக்கல் மூலமாக மாறியிருக்கிறது. அதில் சோகம் என்னவென்றால், தாம் இலத்திரனியல் அடிமைகள் என்பது அவர்களில் யாருக்குமே தெரிவதில்லை. ஒரு ஐந்து நிமிடம் சும்மா இருந்தால், போனை எடுத்து நோண்டாதவர்கள் இங்கு யார் இருக்கிறார்கள்? அவர்கள் யாருக்குமே தாங்கள் அதற்கு மெய்நிகர் அடிமைகள் என்பது தெரியும் என்றா நினைக்கிறீர்கள்? சரி, இதிலிருந்து எப்படி மீள்வது? நீங்கள் ஒரு பழக்கத்துக்கு அடிமையாகி இருக்கிறீர்கள் என்பதை விட, அதை அறிந்து ஏற்றுக்கொள்கிறீர்கள் என்பது முக்கியமானது. நான் ஒரு நோயாளி என்பதை ஏற்காத ஒருவன் எப்படி மருந்தெடுத்து குணமடைய முடியும்?

இப்போதெல்லாம் நான் ஒரு வழிமுறையைக் கையாள்வதுண்டு. அருகில் நண்பர்கள் இருந்தால் தவிர, கைபேசியைத் தொடுவதை இயன்றளவு தவிர்ப்பேன். நண்பர்களின் அருகே கைபேசியுடன் இருக்கும் போது எப்படியும் அவர்கள் பொறுமையிழப்பார்கள். 'போனை வை' என்று அவர்கள் திட்டும் போது உணர்ந்து கொண்டு மீள்வேன். அது ஓரளவுக்கு மெய்நிகர் உலகிலிருந்து வெளியேறுவதற்கு எனக்குக் கைகொடுத்திருக்கிறது. உங்களுக்குரிய மீட்சியை நீங்களே கண்டுகொள்ளுங்கள்.

ஆம். அது மிகக்கடினம் தான். நான் கைபேசியில் காலத்தைக் கடத்துவதாகச் சொல்லி என்னை எப்போதும் திட்டிக்கொண்டிருக்கும் நண்பனொருவன் புதிதாக தனக்கென்று திறன்பேசி ஒன்று வாங்கிய பின்னர், இப்போது என்னை வென்றுவிடும் அளவுக்கு மோசமாக கைபேசியில் மூழ்கி முத்தும் எடுத்து விட்டதை (க்கும்!) கண்டபோது தான் இந்தக் கட்டுரையின் முதல் வரியை எழுதினேன்.

ஆயிரம் தான் சொன்னாலும், தொழில்நுட்பம், மெய்நிகர் உலகம், இந்த இணையம் இது எதுவும் இல்லாமல் இந்தக் கணினி யுகத்தில் எதுவும் சாத்தியம் இல்லை தான். நம் முன்னோர் எவருக்கும் கிடைக்காத இந்த வரத்தை தாராளமாகப் பயன்படுத்துங்கள். ஆனால், அடிமையாகும் அளவுக்கு அதிலேயே ஊறித்திளைக்க வேண்டாமே?

ஆங். முடிப்பதற்கு முன் ஒன்றைச் சொல்லவேண்டும். இந்தக் கட்டுரையில் வாசிப்புக்கு அடிமையான என் சொந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டது, ஒரு பழக்கம் அதிலேயே திளைக்கும் போது எப்படி நம்மை முழுமையாகத் தன்மயப்படுத்தக்கூடியது என்பதை இங்கு சுட்டிக்காட்டத்தான். அதை அப்படியே தலைகீழாகப் புரிந்துகொள்ளக் கூடாது. வாசிப்புக்கு அடிமையாக இருந்தால், நிச்சயம் சொல்லிக்கொள்ளும் படி பலன் கிடைக்கும் - ஏதோ எனக்கு சிறிய அளவிலாவது கிடைத்த அங்கீகாரம் போல. ஆனால், இணைய அடிமையாதலோ, போதை அடிமையாதலோ நமக்கு எதுவுமே தரப்போவதில்லை. மெல்லக் கொல்லும் விஷம் அது. கெடுதி நமக்கு மட்டுமல்ல, நம்மைச் சூழ்ந்திருக்கும் நம் அன்புக்குரியவர்களுக்கும் தான். சும்மாவா சொன்னார்கள், அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சென்று?

# ஈழபதீஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா







லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடந்தேறியது.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வு லண்டனில் பல சமூக மக்கள் வாழும் வெம்பிளி பகுதியில் நடந்தேறியது. மழை நாளாக இருந்த போதிலும் மக்கள் திரண்டு வந்து தேரிழுப்பில் கலந்துகொண்டனர்.

அந்தப் பகுதிக்கான கவுன்ஸில், பொலிஸார் ஆகியோரின் உதவியுடன் பாதுகாப்பு மாற்றும் ஏனைய ஏற்பாடுகளை ஆலய நிர்வாகம் செய்திருந்ததாக நிர்வாகத்தின் சார்பில் ஆர். ஜெயதேவன் அவர்கள் தெரிவித்திருந்தார்.

# அமெரிக்க ஆளில்லா விமானத்தை இரான் சுட்டு வீழ்த்தியது



ஹார்மோஸ் ஜலசந்தி மேல் பறந்த அமெரிக்காவின் ஆளில்லா விமானத்தை இரான் சுட்டு வீழ்த்தியது என அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அது இரானிய எல்லைக்குள் குமோபாரக் அருகில் பறந்ததால் சுட்டு வீழ்த்தியதாக இரானிய பாதுகாவலர்கள் கூறுகின்றனர்.

இந்த நிகழ்வு அமெரிக்காவுக்கு ஒரு தெளிவான விவரத்தை சொல்லும் என நம்புகிறேன் என்று ஐஆர்ஜிசி கமாண்டர் மஜ் -ஜென் ஹுசைன் சலாமி கூறியதாக இரான் நாட்டு பத்திரிகை கூறுகிறது.

அமெரிக்காவுக்கும் இரானுக்கும் நடுவில் தற்போது இதனால் பதற்றம் அதிகரித்துள்ளது.

திங்கள்கிழமையன்று கூடுதலாக ஆயிரம் படைவீரர்களை இரானிய படைகளுக்கு எதிராக அந்த பகுதியில் நிறுத்திவைப்பதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை கூறியிருந்தது.

கடந்த வியாழக்கிழமையன்று அமெரிக்காவின் ஆளில்லா விமானம் தங்களுடைய எல்லை பகுதியில் வந்ததால்தான் சுட்டு வீழ்த்தினோம் என இரானிய ராணுவம் கூறியதாக இரானிய பத்திரிக்கை அறிக்கை வெளியிட்டுள்ளது.

இரானிய உயர் பாதுகாப்பு அமைப்பின் செயலாளர் புதனன்று இரான் எந்தவித எல்லைமீறலையும் பொறுக்காது என எச்சரித்தார்.

அரங்கம்
செய்திகள்
அரங்கம் பத்திரிகையில்
விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் - ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் - ரூபா 200
மாத்திரமே
விளம்பரங்களுக்கு
தொடர்பு : 071 399 909 1
arangamnews@gmail.com
+44 7437665259

NELSON COLLEGE LONDON

NCL
NELSON COLLEGE LONDON

# Now Enrolling

Are you 18+
CALL US

Business Course:
0208 514 0033

Hospitality Management
0203 500 0239



## Why Us

We provide:

- One to One support
- Flexible Timetable
- National and international course-based events & tours
- Employer introduction
- Job placement

## Courses

- HND Business
- HND Hospitality Management

- BA (Hons) Top Up in Business
- BA (Hons) Top Up in Hospitality Management

FIND OUT MORE
www.nelsoncollege.ac.uk

EMAIL US
info@nelsoncollege.ac.uk

IN PARTNERSHIP WITH

LONDON METROPOLITAN UNIVERSITY

Pearson

# இப்படியும் ஒரு காலம் நிலவியது

## இரு இனத்து மாணவர்களையும் மிக இறுக்கமாக இணைக்கத் தளமிட்ட வந்தாறுமூலை மத்திய கல்லூரி- புடம் போட்ட வாழ்க்கை

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள்: கதை—5)*



இன்றைய கிழக்குப் பல்கலைக்கழகம் அன்று வந்தாறுமூலை மத்திய மஹாவித்தியாலயம் என அழைக்கப்பட்டது அதற்கு முன்னர் 1950 களில் அது வந்தாறுமூலை மத்திய கல்லூரி என அழைக்கப்பட்டது அன்று இலவசக் கல்வியையும் 5 ஆம் வகுப்புப் புலமைப்பரிசில் முறையினையும் அறிமுகம் செய்யும் நோக்கில் அன்றைய கல்வி அமைச்சரான சி டபிள்யூ டபிள் யூ கன்ங்னகராவினால் உருவாக்கப்பட்ட மத்தியகல்லூரித் திட்டத்தின் கீழ் அன்று அமைச்சராக இருந்த நல்லையாவின் முயற்சியில் உருவான பாடசாலைதான் வந்தாறுமூலை மத்திய கல்லூரி அது ஓர் விடுதி வசதி நிறைந்த பாடசாலை அதனால் அங்கு 5 ஆம் வகுப்பில் புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள் இலங்கையின் பல திசைகளிலுமிருந்து வந்துவிடுதியில் தங்கி கல்வி பயின்றனர் மட்டக்களப்பின் வடக்கே திரியாய் தொடக்கம் தெற்கே பாணமை வரையுள்ள தமிழ் இஸ்லாமிய மாணவ மாணவியர் விடுதிகளில் தங்கியிருந்தனர். 5 ஆம் வகுப்பு ஸ்கொல்ர்சிப் பரீட்சை எடுக்காத மாண்வர்கட்கும் விடுதியில் தங்க இடம் கொடுக்கப்பட்டு இருந்தது கிண்ணியா மூதூர் ,தோப்பூர், திருகோணமலை நிலாவெளி மிறாவோடை ஓட்டமாவடி காத்தான்குடி அக்கரைப்பற்று முதலான இடங்களிலிருந்து வந்த இஸ்லாமிய மாணவ மாணவியரும் அங்கு கல்வி பயின்றனர்
அமிர்தகளி மெதடிஸ்த மிசன் பாடசாலையில் கிராமத்தில் பயின்றுகொண்டிருந்த நான் புலமைப்ப்ரிசில் சித்தி பெற்று எனது 10 ஆவது வயதில் வந்தாறுமூலை மத்திய கல்லூரிக்குச் செல்கிறேன் வீட்டை விட்டுச் சென்று தனியாக வாழும் வாழ்வு. என்னைப்போல வந்த பலரை நான் அங்கு கண்டேன் வீட்டைவிட்டு வந்த ஏக்கம் அம்மாவைபிரிந்த அவலம் அனைவரும் அழுதபடி ஒன்றிணைந்தோம் முதன் முதலில் இஸ்லாமிய மாண்வர்களை அங்குதான் காண்கிறேன், அத்தோடு கிறீஸ்தவ மாண்வர்களும் இருந்தார்கள் மூதூரில் இருந்து வந்த இஸ்ஹாக்,ஜெயினுலாப்டீன், சலீம், பாரூக், அக்பர்.ஹயாத்துமூமீன்,லத்தீப் இன்னும் பலர் காத்தான்குடியிலிருந்து வந்த அமீர் அலி, ஹாசீம் அக்கரைப்பற்றிலிருந்து வந்த சேகு இஸ்ஸடீன் எனப்பலர் சேவியர்,டெவிட், பெஞ்சமின் எனப் பெயரிய கிறிஸ்தவ மாண்வர்கள் மிக் கணிசமான அளவு இஸ்லாமிய மாண்வர்கள் எமது ஆண்கள் விடுதியில் மூன்று டொமற்றிகள் இருந்தன,அவையாவன யூனியர் டொமற்றி இன்டெர் டொமற்றீ சீனியர் டொமற்றீ 10 வயது தொடக்கம் 12 வயதுவரையானோருக்கு யூனியர் டொமற்றி 13 வயது தொடக்கம் 15 வயதுவரையானோர்க்கு இன்டெர் டொமற்றி 16 வயதுன் தொடக்கம் 18 வயதானோருக்கு சீனியர் டொமற்றி கட்டுபாடான ஹொஸ்டல் வாழ்க்கை காலை 5.00 மணிக்கு படுக்கையிலிருந்து எழ வேண்டும் காலையில் உடற்பயிற்சியுடன் அன்றைய வாழ்க்கை ஆரம்பமாகும் அந்த தின வாழ்க்கை அன்று 10.00 மணிக்குப் படுக்கையுடன் நிறைவுறும் காலை இறை வழிபாட்டுக்கு ஒரு மணி. காலைப்படிப்புக்கு ஒரு மணி காலைசாப்பாட்டுக்கு ஒரு மணி பாடசாலை செல்ல ஒரு மணி.

மத்தியானச் சாப்பாட்ட்டுக்கு ஒரு மணி பின்னேரம் விளியாட ஒரு மணி. இரவுபடிப்புகு ஒருமணி இரவுச்சாப்பாட்டுக்கு ஒரு மணி பின்னிரவுப்படிப்புக்கு ஒரு மணி படுக்கைக்கு இறுதி மணி என ஒருவித மணிக்கூட்டுக் கட்டுப்பாட்டு வாழ்க்கை
நேரம் தவறாத இறுக்கமான ஒரு இராணுவக் கட்டுப்பாட்டுடன் விடுதி வாழ்க்கை அமைந்திருந்தது எமது யூனிய டோமற்றியில் எனக்கு வலது பக்கம் இஸ்சாக்கின் கட்டில் என்றால் வலது பக்கம் ஜெயினுலாப்டீனின் கட்டில் இருக்கும் ஒரு தமிழ்ப்பையன் ஒரு முஸ்லிம் பையன் என கட்டில் அருகருகே ஒதுக்கப்பட்டிருந்து அவர்கள் ஒருவரை ஒருவர் அறியவேண்டும் ஒருவரோடு ஒருவர் உரையாட வேண்டும் என்பதில் பாடசாலை நிர்வாகம் அதிக அக்கறை கொண்டிருந்துத நாமும் பரஸ்பரம் உரையாடியபடி உற்ங்குவோம்.

இதனால் ஒரு குடும்பத்துப் பிள்ளைகள் போல நெருக்கமான உறவானோம் இஸ்லாமிய கிறிஸ்தவ இந்து மாண்வர்களுக்கு வணக்கத் தலங்களாக தனித் த்னி அறைகள் ஒதுக்கப்படிருந்தன இறைவண்க்கம் போது மட்டுமே பிரிந்திருப்போம்.ஏனைய நேரமெல்லாம் ஒன்றாய்த் திரிவோம் ஒன்றாய் இருப்போம் வகுப்பறை, தமிழ்சங்கம், மாண்வ மன்றம், ஏனைய மன்றங்கள்.விளையாட்டு மைதானம் நாடகங்கள் என அனைவரும் எப்போதும் நெருக்கமாக ஒன்றாகச் செயற்படும் திட்டங்கள் பாடசாலையில் வகுக்கப்பட்டிருந்தன அவை எம்மை மேலும் நெருக்கின ஏழு வருட வாழ்வு என்னமாய் நெருக்கியிருக்கும் நெருக்கம் நெருக்கம் மிக மிக நெருக்கம் இஸ்லாமியரின் வணக்கமுறை,பண்பாடு சாப்பாடு அவர்களின் குடும்பங்கள் பற்றியெல்லாம்




அறியும் வாய்ப்புக் கிடைத்து.

அவர்களின் நோன்பு எங்க்ளுக்கோர் பெரு வியப்பு. விடியப்புறம் சாப்பாடு மாலையில் நோன்புகஞ்சி என அப்பண்பாட்டுக்கு அறிமுகமானோம் அவர்களின் தொழுகை எமக்கு புதுவிதமாக இருந்தது.

இதேபோல் இந்து மாண்வர்களின் தேவாரம் வணக்கமுறை சாப்பாடு தைப்பொங்கல் சரஸ்வதிபூசை அங்கு படைக்கப்படும் பொங்கல் என்பன அவர்களுக்குப் புதியனவாக இருந்தன எனது 10 வயதிலிருந்து 17 வயது வரை ஏழு வருடங்கள் இஸ்லாமிய மாண்வருடன் ஒரு குடும்பத்துச் சகோதர்கள் போல வாழும் வாழ்வு வாய்த்து அது என்னைப்புடம் போட்டது.என்னை மட்டுமல்ல அனைவரையும் புடம் போட்துட இஸ்லாமியரின் தொழுகை முறைகளை இந்துமதச் சிறுவர்கள் அறிந்தனர்.இந்து வண்க்கமுறையை இஸ்லாமியச்சிறுவர்கள் அறிந்தனர் கிராத்தும் சலவாத்தும் எங்கள் செவி ஏறின தேவாரமும் திருவாசகமும் அவர்கள் செவி ஏறின சில இந்து மாணவர்கள் அழகாகச் சலவாத்து கூறினர் சில இஸ்லாமிய மாண்வர்கள் அழகாக உருக்கமாகத் தேவாரம் திருவாசகம் பாடினர் புரிந்துணர்வு சகவாழ்வு என்பன கற்பிக்காமலேயே இரு சாரா‌ரின் உடலிலும் உள்ளத்திலும் இடம் கொண்டன சரஸ்வதி பூசை,பொங்கல் திருநாள் என்றால் இஸ்லாமிய மாண்வர்களே முன்னின்று தேங்காய் திருவிப் பிழிந்து பொங்கல் செய்வதில் முன் நிற்பார்கள். நோன்புக்கஞ்சியினை இஸ்லாமிய மாண்வர்களின் வழிகாட்டலில் இந்து மாண்வர்கள் செய்வார்கள் பொங்கல் கடலை அவல் என எங்கள் படையல்களை அவர்கள் உண்ண நோன்புக் கஞ்சி பேர்ரிச்சம்பழம என அவர்கள் பண்பாட்டு உணவுகளை நாம் உண்டு மகிழ்ந்தோம்
எனது வீட்டில் இருந்து வாராவாரம் இறைச்சி மீனுடனான பெரிய சாப்பாட்டுப்பார்சல் வரும். நாமும் சாப்பிட இணைவோம் என இஸ்லாமிய மாண்வர்கள் கூறிவிடுவார்கள். அனைவரும் வளைத்திருந்து அச்சாப்பாடைச் சாப்பிடுவோம் இஸ்லாமிய மாண்வர்களின் வீட்டிலிருந்து மாட்டிறச்சிக் கறியுடன் சாப்பாடு வரும்.நாம் அவர்களுடன் இணைந்து அதனைச் சுவைத்து மகிழ்வோம் இன்றோ பாடசாலைகள் த்மிழ் முஸ்லீம் பாடசாலைகள் எனப் பிரிந்து விட்டன இரு மத மாணாக்கர்களும் இணையும் இடங்கள் இல்லை தனித் தனியாக குழுக் குழுவாகவே எல்லாரும் இப்போது திரிகிறார்கள் இந்த நாட்டின் கல்வித்திட்டமும் புதிய சிந்தனைகளின் வரவும் அரசியலும் இவர்களைப் பிரித்தேவிட்டன
ஒன்றாக வாழ்ந்தவர்கள் பிரிந்த சோக்க கதை அது வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் இஸ்லாமிய மாண்வர்கள் த்மிழ் மாண்வர்களோடு இணிந்து நாடகங்களிலும் நடித்தார்கள் என்றால் ஆச்சரியப்படுவீர்கள் மஹாபாரதக் கதை சரித்திரக் கதைகளில் வேடமிட்டு உருமாறி மேடையேறி தம் திறமைகளை அவர்கள் வந்தாறுமூலை மத்திய கல்லூரி கலை மண்டபத்தில் காட்டினர்.அது ஒரு தனிக்கதை முன்னாள் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக உறுப்பினருமான சேகு இஸ்சடீன், இன்று மோனாச் பல்கலைக்க்ழக பேராசிரியரான அமீர் அலி த்ப்லீக் இயக்கத்தின் முக்கியஸ்தரான ஹயாத்து மூமீன் ஆகியோர் அங்கு படித்தபோது நாடகம் நடித்தவர்களே அவர்கள் நடித்த நாடகங்களும் அவர்கள் தாங்கிய பாத்திரங்களும் முக்கியமானவை சுவராஸ்யமானவை

அடுத்த வாரம் அதனைப் பதிகிறேன்
( தொடரும்)

## மட்டக்களப்பு பலாச்சோலை மக்கள் மண் அகழ்விற்கு எதிராக ஆர்ப்பாட்டம்



‘மீன்வளர்ப்பு திட்டம் என்ற போர்வையில் தோண்டப்படும் பாரிய குழியிலிருந்து எடுக்கப்படும் மணலை சட்டவிரோதமாக விற்பனை செய்வதை தடை செய்யுமாறு’ கோரி மட்டக்களப்பு பலாச்சோலை கிராமமக்கள் ஆர்ப்பாட்டமொன்றை கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தினர்.

ஏறாவூர்ப்பற்று - செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பலாச்சோலை கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பலாச்சோலைக் கிராமத்தின் மூன்று இடங்களில் சிலர் காணிகளை கொள்வனவு செய்து, மீன்வளர்ப்புத் திட்டத்திற்கான அனுமதியினைப் பெற்று கடந்த ஒன்றரை வருடகாலமாக பாரிய குழிகளைத் தோண்டுகின்றனர் என்றும் இக்குழிகளிலிருந்து எடுக்கப்படும் மணல் வெளிமாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு, விற்பனை செய்யப்படுவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

மணல் வியாபாரிகளின் இந்த நடவடிக்கையினால் மழைக்காலத்தில் பலாச்சோலைக் கிராமம் முற்றாக வெள்ளத்தில் மூழ்கும் அபாயநிலை ஏற்படும் என்றும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்



அரங்கம் பத்திரிகையில்
விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் -
ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் -
ரூபா 200 மாத்திரமே

# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## இறக்கும் மீன்கள் - கவலையில் மீனவர்கள்



'புளுகுணாவை குளத்தில் மீன்களெல்லாம் இறந்து மிதக்குது, வேளாண்மையெல்லாம் நீரின்றி வாடுது. காட்டுயானைகளும் நீரின்றி, உணவின்றி ஊர்களுக்குள் நுழையுது. நம்மட மாவட்டத்தில மழை பெய்யாததன் காரணமாகத்தான் இப்படியான துர்ப்பாக்கிய நிலையேற்பட்டிருக்கின்றது.' என்கிறார் சந்திரமோகன்.

புளுகுணாவை குளத்தின் வான்கதவில் நின்றுகொண்டு, வான்கதவின் அடியில் இறந்து கிடக்கும் மீன்களை உற்றுப்பார்த்து வீரசிங்கத்திடம் பேசும் போதே இதனை அவர் குறிப்பிட்டார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தென்மேற்கு பிரிவில் புளுகுணாவை குளம் அமைந்துள்ளது. இக்குளத்து நீர் விவசாய செய்கைக்காகவும், மீன்பிடிக்காகவும், மிருகங்கள் நீர்குடிப்பதற்காகவும் பயன்படுகின்றது. இக்குளம் 31அடி உயர கொள்ளளவினைக்கொண்டது. இக்குளத்தினை மையமாக கொண்டு வருடாந்தம் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதேவேளை இக்குளத்தினை கொண்டு மீன்பிடியில் ஈடுபடுவதற்காக மீனவர் சங்கமொன்றும் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றது. இக்குளத்தில் மீனவர்கள் மீன்குஞ்சுகளை விட்டு, அதனை பராமரித்து, அவற்றினைப் பிடித்து விற்பனை செய்து அதன்மூலமாக இலாபம் ஈட்டி வருகின்றனர். இதனால் நேரடியாக தாந்தாமலை, நாற்பதுவட்டை, கச்சக்கொடிசுவாமிமலை போன்ற கிராமங்களைச் சேர்ந்த 70 குடும்பங்கள் பயனடைகின்றனர். அன்றாட வாழ்க்கையை சீராகக் கொண்டுசெல்வதில் சிக்கலின்றி உள்ளனர். ஆனாலும் தற்போதைய சூழல் இவர்களது வாழ்வாதாரத்தினை கேள்விக்குறியாக்கியுள்ளதாகக் கூறி கவலையும் வெளியிடுகின்றார் வீரசிங்கம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட நாட்கள் மழைபெய்யாததன் விளைவாக, குளங்களில், குட்டைகளில் நீர் வற்றியுள்ளது. இதன்காரணமாக விவசாயச்செய்கை



பாதிக்கப்பட்டுள்ளது. குளங்களில் இருக்கின்ற குறைந்தளவிலான நீரினையும் எவ்வாறாயினும் பெற்று தமது விவசாய செய்கையினை காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில் நீர்பம்பிகளைப் பயன்படுத்தி நீரினை இறைத்துக்கொண்டும் இருக்கின்றனர் விவசாயிகள். இதற்கு தீர்மானிக்கப்பட்ட அளவினைவிட அதிகமான விவசாயசெய்கையில் விவசாயிகள் ஈடுபட்டமையும் காரணமென்று கூறப்படுகின்றது.

வருடாந்தம் சிறுபோகம், பெரும்போகம் நெற்செய்கை மேற்கொள்கின்ற போது விவசாயிகளின் கருத்துக்களையும், நீர் நிலைமைகளையும் கருத்தில் கொண்டு, உரிய திட்டமிடல்களையும்



மேற்கொண்டு ஆரம்பக்கூட்டங்கள் நடைபெறுவதுண்டு. அதன்போது தீர்மானிக்கப்படும் காணி அளவிற்கு அமையவே விவசாயச் செய்கையினை மேற்கொள்ள வேண்டும். அதனையும் மீறி நெற்செய்கை மேற்கொண்டால் அதற்கான உதவிகளை வழங்கமுடியாது. ஆனாலும் அதனையும் மீறி பலர் நெற்செய்கையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

புளுகுணாவை குளத்தில் நீர்மட்டம் தற்போது 3அடி உயரத்திலேயே காணப்படுகின்றது. இங்கிருந்த நீர் விவசாய செய்கைக்கு வழங்கப்பட்டமையினால், குளத்தின் நீர்மட்டம் குறைவடைந்துள்ளது. இந்நீரில் மீன்கள், ஏனைய உயிரினங்கள் வாழ்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. குறைவான நீரில் வெப்பம் அதிகமாகவிருக்கும். வெப்பத்தின் காரணமாக மீன்கள் இறக்கும் நிலையேற்படும். இவ்வாறான சம்பவம்தான் புளுகுணாவை குளத்தில் மீன்கள் இறக்கும் நிலையினை உருவாக்கியுள்ளது.

விவசாயமா? மீன்பிடியா? விலங்குகளா? இவற்றில் எவற்றினை முக்கியத்துவப்படுத்த வேண்டும் என்ற வினாவும் இங்கு எழுகின்றது. மின்பிடி, விவசாயம் ஆகிய இரண்டும் வாழ்வாதாரத்திற்கான தொழில்களாக இருக்கின்றன. விலங்குகளுக்கு மிக அத்தியவசியமானதொன்றாகவும் குளத்துநீர் விளங்குகின்றது. இந்நிலைகளில் இருந்து அவதானிக்கின்ற போது, தேவைக்கேற்ப, திட்டமிடலுக்கேற்ப நீரினை விவசாயச் செய்கைக்கு வழங்கிவிட்டு, நீர்வாழ் உயிரினங்கள் வாழ்வதற்கு தேவையான நீரினையும் குளத்தில் பேணிபாதுகாக்க வேண்டிய பொறுப்பு உரிய அதிகாரிகளுக்கு உண்டு. ஏனெனில் விவசாய செய்கை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிறைவுபெற்றுவிடும்.

ஆனால் மிருகங்களுக்கும், நீர்வாழ் உயிரினங்களுக்கும் தொடர்ச்சியாக நீர்வேண்டும். இல்லாதுவிடின் உயிரினங்கள் இறக்கும் நிலையேற்படும்.

குளங்களிலும் குறிப்பிட்ட அளவில் நீரினை தேக்கிப்பிடித்துக்கொள்ள வேண்டியதும் அவசியமானதே. அவ்வாறு நீரினை தேக்காதுவிடின் காடுகளில் வாழும் யானைகள் வீடுகளை நோக்கி வரும் நிலையேற்படும். இதன்மூலமாகவும்

**படுவான் பாலகன்**

மக்கள் அனர்த்தங்களை எதிர்கொள்ள வேண்டியேற்படும். இந்நிலையில்தான் புளுகுணாவை மீனவர் சங்கத்தினரும் நீரினை திறந்துவிடுவதனை நிறுத்த வேண்டுமென கூறுகின்றனர். அதேவேளை குளத்தில் எட்டு அடி உயரத்திற்கு நீரினை வைத்துப்பேணிப்பாதுகாக்க வேண்டும் எனக்கூறுகின்றனர். அண்மையில் ஆறு இலட்சம் மீன்குஞ்சுகளை குளத்தில் இட்டிருக்கின்றனர். அம்மீன்களும் இறக்கும் நிலையேற்படும் எனக்கூறும் இங்குள்ள மீனவர்கள், அவ்வாறு இறந்தால் மூன்று வருடங்களுக்கு வாழ்வாதாரத்தினை இழங்கும் நிலையேற்படும் என்றும் கூறுகின்றனர். இந்நிலைகளில் நின்றுபார்க்கின்ற போதுதான் குளத்து நீரின் அவசியத்தினை விளங்கிக்கொள்ள முடிகின்றது. இங்குள்ள மீனவர்கள் குறிப்பிடுவது போன்று குறைந்தது 8அடி நீரினையாவது குளத்தில் தேக்கிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நீண்டநாட்களுக்கு மழைபெய்யாவிட்டாலும், இந்நீரின் பயனை பல நாட்களுக்கு அனுபவிப்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். இதனைக்கவனத்தில் கொண்டு எதிர்வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமையினை உறுதிப்படுத்தவும் வேண்டும் என்பது வீரசிங்கத்தின் கருத்தாகும். பேசிவிட்டு கவலையில் கங்காணியார் குளத்துப்பக்கமாக நடந்தான் வீரசிங்கம்.

# விளையாட்டு

## கிரிக்கட் உலகக் கிண்ணம் 2019

*நடைபெற்றுவரும் 12-வது உலகக் கிண்ண கிரிக்கட் தொடரில் இதுவரை இடம்பெற்ற போட்டிகளின் முடிவு விபரங்கள்.*

யாசின் அரபாத்

| போட்டி இல. | அணிகள் | போட்டி முடிவுகள் | ஆட்ட நாயகன் |
|---|---|---|---|
| 1. | இங்கிலாந்து – தென்னாபிரிக்கா | இங்கிலாந்து அணி 104 ஓட்டங்களால் வெற்றி | பென் ஸ்டோக்ஸ் |
| 2. | மேற்கிந்திய தீவுகள் - பாகிஸ்தான் | மேற்கிந்திய தீவுகள் 7 விக்கட்டுக்களால் வெற்றி | ஓஸானே தோமஸ் |
| 3. | நியூசிலாந்து-இலங்கை | நியூசிலாந்து அணி 10 விக்கட்டுக்களால் வெற்றி | மேட் ஹென்றி |
| 4. | ஆப்கானிஸ்தான் - அவுஸ்ரேலியா (பகலிரவு) | அவுஸ்ரேலியா அணி 7 விக்கட்டுக்களால் வெற்றி | டேவிட் வோர்னர் |
| 5. | தென்னாபிரிக்கா-பங்களாதேஸ் | பங்களாதேஸ் அணி 21 ஓட்டங்களால் வெற்றி | சகிப் அல் ஹஸன் |
| 6. | இங்கிலாந்து – பாகிஸ்தன் | பாகிஸ்தான் அணி 14 ஓட்டங்களால் வெற்றி | முஹமட் ஹபீஸ் |
| 7. | ஆப்கானிஸ்தான் – இலங்கை | இலங்கை அணி 34 ஓட்டங்களால் வெற்றி | நுவான் பிரதீப் |
| 8. | தென்னாபிரிக்கா– இந்தியா | இந்தியா அணி 6 விக்கட்டுக்களால் வெற்றி | ரோஹித் சர்மா |
| 9. | பங்களாதேஸ் - நியூசிலாந்து (பகலிரவு) | நியூசிலாந்து அணி 2 விக்கட்டுக்களால் வெற்றி | ரோஸ் டைலர் |
| 10. | ஆஸ்திரேலியா - மேற்கிந்திய தீவுகள் | அவுஸ்ரேலியா அணி 15 ஓட்டங்களால் வெற்றி | கூல்டர் நைல் |
| 11. | பாகிஸ்தான் – இலங்கை | மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டது | |
| 12. | இங்கிலாந்து - பங்களாதேஸ் | இங்கிலாந்து அணி 106 ஓட்டங்களால் வெற்றி | ஜேசன் ரோய் |
| 13. | ஆப்கானிஸ்தான் -நியூசிலாந்து (பகலிரவு) | நியூசிலாந்து அணி 7 விக்கட்டுக்களால் வெற்றி | ஜிம்மி நீசம் |
| 14. | இந்தியா – ஆஸ்திரேலியா | இந்தியா அணி 36 ஓட்டங்களால் வெற்றி | சிகர் தவான் |
| 15. | தென்னாபிரிக்கா– மேற்கிந்திய தீவுகள் | மழை காரணமாக முடிவுகள் பெறப்படவில்லை | |
| 16. | பங்களாதேஸ் - இலங்கை | மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டது | |
| 17. | ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் | அவுஸ்ரேலியா அணி 41 ஓட்டங்களால் வெற்றி | டேவிட் வோர்னர் |
| 18. | இந்தியா - நியூசிலாந்து | மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டது | |
| 19. | இங்கிலாந்து - மேற்கிந்திய தீவுகள் | இங்கிலாந்து அணி 8 விக்கட்டுக்களால் வெற்றி | ஜோய் ரூட் |
| 20. | இலங்கை – ஆஸ்திரேலியா | அவுஸ்ரேலியா அணி 87 ஓட்டங்களால் வெற்றி | ஆரோன் பின்ச் |
| 21. | தென்னாபிரிக்கா- ஆப்கானிஸ்தான் | தென்னாபிரிக்கா அணி 8 விக்கட்டுக்களால் வெற்றி | இம்ரான் தாஹிர் |
| 22. | இந்தியா - பாகிஸ்தான் | இந்தியா அணி 89 ஓட்டங்களால் வெற்றி | ரோஹித் சர்மா |
| 23. | மேற்கிந்திய தீவுகள் - பங்களாதேஸ் | பங்களாதேஸ் அணி 7 விக்கட்டுக்களால் வெற்றி | சகிப் அல் ஹஸன் |
| 24. | இங்கிலாந்து – ஆப்கானிஸ்தான் | இங்கிலாந்து அணி 150 ஓட்டங்களால் வெற்றி | ஓயின் மோர்கன் |



## எல்லே சாம்பியனாக செங்கல்டி மகளிர் அணி



கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் மகளிர் எல்லே தொடரில் மட்டக்களப்பு மாவட்டம் சார்பாக பங்குவற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கிழக்கு மாகாண விளையாட்டு விழாவில் மகளிருக்கான எல்லே தொடர் கந்தளாயில் செவ்வாய்கிழமை (18) பிற்பகல் நடைபெற்றது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியில் இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட அணிகள் பங்கேற்றன.

இரண்டு இன்னிங்ஸ் கொண்ட போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மட்டக்களப்பு மாவட்டம் சார்பில் பங்குபற்றிய செங்கலடி கோல்ட் ஸ்டார் இளைஞர் கழக அணி களத்தடுப்பினை தெரிவு செய்தது.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை அணி 30 பந்துகளில் நான்கு ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி நான்கு ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இரண்டாம் இன்னிங்ஸில் திருகோணமலை அணி இரண்டு ஓட்டங்களைப் பெற்றது. வெற்றி இலக்கான மூன்று ஓட்டங்களை பெற்று மட்டக்களப்பு மாவட்ட அணி சம்பியனானது.

## பாகிஸ்தான் பிரதமரின் ஆலோசனையைக் கேட்காத கப்டன்



ஞாயிற்றுக்கிழமை அன்று மான்செஸ்டரில் உள்ள ஓல்ட் டிரஃபோர்ட் மைதனாத்தில் நடைபெற்ற இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையேயான உலகக் கோப்பை போட்டியில் இந்தியா 89 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த போட்டிக்கு முன்பு ஜூன் 15 ஆம் தேதி ட்விட்டரில் பாகிஸ்தான் பிரதமரும் முன்னாள் கிரிக்கெட் வீரருமான இம்ரான் கான் பாகிஸ்தான் அணிக்கு சில அறிவுரைகளை வழங்கியுள்ளார்.

சில சிறப்பான வீரர்கள் தேர்வு செய்ய வேண்டும் எனவும் டாசில் வென்றால் பேட்டிங் தேர்வு செய்யுங்கள் என்றும் சில பரிந்துரைகளைச் செய்திருந்தார்.

நேற்று முதல் இன்னிங்ஸின் 46 ஓவர் வரை மழை இல்லாமல் இருந்ததால் இந்தியா தொடர்ந்து ஆடி 336 ரன்கள் எடுத்தது. அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் 36 ஓவருக்கு 166 ரன்கள் எடுத்திருந்தது.

மழை காரணமாக இரண்டாம் இன்னிங்ஸ் இருமுறை பாதிக்கப்பட்டதால் ஆட்டம் 40 ஓவராக குறைக்கப்பட்டது. அதன்பின் டக்வொர்த் லூயிஸ் முறைப்படி இந்தியா 89 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பிரதமரின் ஆலோசனையை பாகிஸ்தான் கப்டன் கேட்காததே தோல்விக்கு காரணம் என்ற விமர்சனங்கள் இதனால் எழுந்துள்ளன.

# அறிவோம் - தெளிவோம் - பகிர்வோம் - 39

## க.பொ.த. (உ/த) - புதிய பாடத்திட்டம் - தமிழ்

- மட்டுநகர் யுவன் -

### இலக்கணம்

1. இடைநிலை மெய்ம்மயக்கம் என்றால் என்னவென்பதைக் கூறி, உதாரணம் தருக.

மொழிக்கு இடையில் அதாவது சொல்லுக்கு இடையில் மெய்கள் கூடும் நிலையை இடைநிலை மெய்ம்மயக்கம் என்பர்.
(உ – ம்): சத்தம், வெட்கம்

2. இடைநிலை மெய்ம்மயக்கம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
இரண்டு வகைப்படும். அவையாவன:
(i) உடனிலை மெய்ம்மயக்கம் (ii) வேற்றுநிலை மெய்ம்மயக்கம்.

3. உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்னவென்பதைக் கூறி, உதாரணம் தருக.
மொழிக்கு இடையில் மெய்கள் தம்மோடு தாம் கூடும் நிலையை உடனிலை மெய்ம்மயக்கம் என்பர்.
(உ - ம்): சத்தம்.

4. உடனிலை மெய்ம்மயக்கமாக வரும் மெய்கள் எவை?
க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ற், ன், ய், ல், வ், ள்.

5. உடனிலை மெய்ம்மயக்கமாக மட்டும் வரும் மெய்கள் எவையெனக் கூறி, உதாரணம் தருக.
க், ச், த், ப்.
(உ – ம்): பக்கம், அச்சம், சத்தம், அப்பம்.

6. க், ச், த், ப் என்னும் மெய்கள் எம்மெய்களோடு கூடி வரும் என்பதைக் கூறி, உதாரணம் தந்து விளக்குக.
('எம்மெய்களோடு கூடி வரும்' என்பது 'இந்த மெய்களுக்கு அருகில் எந்த மெய்கள் வரும்?' என்பதைக் குறிக்கும்.)

க், ச், த், ப் என்னும் மெய்கள் தம்மோடு தாமே கூடி வரும்.

(உ – ம்): பக்கம், அச்சம், சத்தம், அப்பம்.

இங்கு பக்க வெளிப்பட்டு நிற்கும் மெய் 'க்' என்பதாகும். அதற்கு அருகில் 'க' என்னும் உயிர்மெய் நிற்கிறது. இதிலுள்ள 'க்' என்னும் மெய் வெளிப்பட்டு நிற்காமல் உயிருடன் சேர்ந்து உயிர்மெய் நிலையில் நிற்கிறது. இதிலுள்ள உயிரெழுத்தை நீக்கிவிட்டால் 'க்' என்னும் மெய் வெளிப்பட்டு 'க்க்' என்று நிற்கும். அது, பின்வருமாறு:
பக்கம் (க்க்)

க்க் - இங்கு 'க்' என்னும் மெய்க்கு அருகில் 'க்' என்னும் மெய் வந்துள்ளது. அதாவது தம்மோடு தாம் கூடியுள்ளது. இவ்வாறு வருவதையே உடனிலை மெய்யம் மயக்கம் என்பர்.

7. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்றால் என்னவென்பதைக் கூறி, உதாரணம் தருக.
மொழிக்கு இடையில் மெய்கள் தம்மோடு தாம் கூடாமல் வேறு மெய்களோடு கூடி வரும் நிலையை வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பர்.
(உ - ம்): வெட்கம்

8. வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக வரும் மெய்கள் எவை?
ங், ஞ், ட், ண், ந், ம், ற், ன், ய், ர், ல், வ், ழ், ள்.

9. வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக மட்டும் வரும் மெய்கள் எவையெனக் கூறி, உதாரணம் தருக.
ர், ழ்.
(உ – ம்): வேர்கள், வாழ்தல்.

10. ர், ழ் என்னும் மெய்கள் எம்மெய்களோடு கூடி வரும் என்பதைக் கூறி, உதாரணம் தந்து விளக்குக.
('எம்மெய்களோடு கூடி வரும்' என்பது 'இந்த மெய்களுக்கு அருகில் எந்த மெய்கள் வரும்?' என்பதைக் குறிக்கும்.)

ர், ழ் என்னும் மெய்கள் தம்மோடு தாம் கூடி வராமல் க, ச, த, ப, ஞ, ந, ம, ய, வ என்பனவற்றுடன் கூடி வரும்.

(உ – ம்): வேர்கள்,
இங்கு வெளிப்பட்டு நிற்கும் மெய் 'ர்' என்பதாகும். அதற்கு அருகில் 'க' என்னும் உயிர்மெய் நிற்கிறது. இதிலுள்ள 'க்' என்னும் மெய் வெளிப்பட்டு நிற்காமல் உயிருடன் சேர்ந்து உயிர்மெய் நிலையில் நிற்கிறது. இதிலுள்ள உயிரெழுத்தை நீக்கிவிட்டால் 'க்' என்னும் மெய் வெளிப்பட்டு 'ர்க்' என்று நிற்கும். அது, பின்வருமாறு:
வேர்கள் (ர்க்)

ர்க் - இங்கு 'ர்' என்னும் மெய்க்கு அருகில் 'க்' என்னும் மெய் வந்துள்ளது. அதாவது தம்மோடு தாம் கூடாமல் வேறு மெய்யுடன் கூடி வந்துள்ளது. இவ்வாறு வருவதையே வேற்றுநிலை மெய்யம் மயக்கம் என்பர்.

• பின்வரும் அட்டவணையைப் பார்த்து மேலும் சில விடயங்களை அறிந்துகொள்க.

| | உடனிலை மெய்ம்மயக்கமாக மட்டும் வருவன | வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக மட்டும் வருவன | உடனிலையாகவும் வேற்றுநிலையாகவும் வருவன |
|---|---|---|---|
| வல்லினம் | க், ச், த், ப். | ----- | ட், ற். |
| மெல்லினம் | ----- | ----- | ங், ஞ், ண், ந், ம், ன். |
| இடையினம் | ----- | ர், ழ். | ய், ல், வ், ள். |
| *மொத்தம்* | **4** | **2** | **12** |

பயிற்சி :

1.பின்வருவனவற்றுள் உடனிலை மெய்ம்மயக்கமாக வந்துள்ள சொல்
(1) கலம் (2) களவு (3) கலத்தல் (4) கோள்கள்
(5) சிற்பம்

2.பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்ம்மயக்கமாக வந்துள்ள சொல்
(1) பனி (2) கற்றல் (3) காட்சி (4) கோலம்
(5) பட்டம்

# கற்போம்

## என் அப்பா என் ஹீரோ

அபிராமி யுவராஜன்

அப்பா

உள்ளக் கவலைகளைக் காட்டா
உம் புன்னகையில் நான் தோற்றுப்போகிறேன்

கள்ளம் கபடமேதும் செய்கையிலே
என்னைக் கண்டிக்கும் அழகினில் மலைத்து நிற்கிறேன்.

வலிகளுக்கெல்லாம் வளைந்து கொடுக்கா
உம் நிமிர்ந்த நடையில் நெகிழ்ந்து போகிறேன்

என் கனவுகள் என்றுமே
கறைபடாமல் காத்திடும்
உம்மை வியந்து பார்க்கிறேன்

நடிக்கத் தெரியாத ஹீரோ
நீர் என்பதில் பெருமைப்படுகிறேன்
அந்த ஹீரோ தான் எனக்குப்
பிடிக்கும் என்று அழுத்திச் சொல்லுவேன்..
உமக்கு நிகர் நீர்தான் என்பதை
மீண்டும் ...உறுதி செய்கிறேன்..

என்றுமே அன்பு மகளாய்

பக்க அனுசரணை
NCL
NELSON COLLEGE LONDON
IN PARTNERSHIP WITH
LONDON METROPOLITAN UNIVERSITY

# அனர்த்தகால உளவியல் முதலுதவி - பகுதி 08

Dr. யூடி ரமேஸ் ஜெயகுமார்
உளநல மருத்துவர்.
வாழைச்சேனை வைத்தியசாலை

## கொடூரமான மனவடுவிற்கு உள்ளானவருக்கான அறிவாற்றல் - நடத்தைச்சிகிச்சை

துன்பமான மனவுணர்ச்சிகளை அனுபவித்துள்ள அநேகமான மக்கள் வாழுமிடத்தில் (உதாரணமாக, சுனாமி, போர், குண்டுவெடிப்பு போன்ற அனர்த்தங்களுக்குப் பிறகு அப்பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு) குழுவாக அல்லது சமூகமட்டத்தில் உதவியளிப்பது பொருத்தமானதாகும். ஆனால் சில சமயம் தனிப்பட்ட உதவி முறைகள் தேவைப்படுகின்றன. உதாரணமாக, ஒருவர் ஏற்கனவே குழுவின் உறுப்பினராக இருந்து பல கூட்டங்களின் பின்னரும் பாரிய முறைப்பாடுகளைக் கொண்டிருத்தல், அல்லது வேறு சிலர் மற்றவர்களின் முன் கதைக்கத் தயங்குவர் அல்லது கூட்டங்களில் பங்குபற்றப் பயப்படுவர். அவர்களுக்குத் தனியாகப் பரிகாரங்களைத் தொடங்குதல் சிறந்ததாகும். சமுதாயத்தில் ஒருவரின் அந்தஸ்து அல்லது அப்பிரதேசத்தில் இராணுவ, அரசியல் இயக்கங்களின் பிரசன்னம், கொடூர சித்திரவதைச் சம்பவங்களைப் பகிரங்கமாக வெளிப்படுத்துவதைச் சாத்தியமற்றதாக்கிவிடும். எனவே தனிப்பட்ட முறையில் அந்தரங்கமாக உதவுவது மிகச் சிறந்ததாகும்.

இப்பகுதியில் கொடூர மனவடுவிற்குள்ளான தனிப்பட்டவர்களுக்கு உதவும் படிப்படியான அணுகுமுறையைக் கற்கலாம். இது சில அமர்வுகளாக அமையும். ஒவ்வொரு அமர்வும் 45 நிமிடங்கள் வரை எடுக்கலாம். முதல் சில அமர்வுகளுக்குப் பாதிக்கப்பட்டவரை குடும்ப உறுப்பினர் ஒருவருடன் அல்லது நண்பருடன் வரச் செய்தல் வேண்டும். அமர்வுகளின் திட்டமானது பாதிக்கப்பட்டவரின் தேவை, நிலைமைகளுக்கேற்ப மாற்றப்படலாம் அல்லது திருத்தியமைக்கப்படலாம்.

*அமர்வு - 01 குறிக்கோள்:* பாதிக்கப்பட்டவருடனும் அவருடன் வரும் குடும்ப அங்கத்தவர் அல்லது நண்பருடனும் நம்பிக்கை உறவை ஏற்படுத்தல். முதலாவது சந்திப்பில் பாதிக்கப்பட்டவரைச் சௌகரியமாக இருக்கச் செய்தல் வேண்டும். மற்றவர்களால் குழப்பப்படாத அமைதியான இடத்தைக் கண்டுபிடித்தல் வேண்டும். அவர்கள் சொல்லுவதை முழுக் கவனத்துடன் அவதானமாகக் கேட்டல் வேண்டும். இப்படியான சூழ்நிலையிலேயே பாதிக்கப்பட்டவரும் அவரது குடும்ப உறுப்பினரும் மனதைத் திறந்து கதைக்கக்கூடியதாக இருக்கும்.



முதலில் உதவி தேடி வருபவரையும் குடும்பத்தவரையும் நடந்தவற்றைக் கூறவிடல் வேண்டும். அவர்களை முழுக் கதையினையும் கூற ஊக்கப்படுத்தல் வேண்டும். அவர்கள் தாம் செய்ததை, அந்த நேரத்தில் அனுபவித்த உளரீதியான உடலியல் ரீதியான உணர்வுகளை, அந்தச் சம்பவத்தின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் என்னென்ன நினைத்தார்கள் என்பதனை வெளிப்படுத்த உதவவேண்டும். அமர்வின் முடிவில் பாதிக்கப்பட்டவரின் தன்மைக்கு நிலைமைக்கு ஏற்ப கிழமைக்கு ஒரு தடவை, தேவைப்படும் கால மூன்று கடினமான அனுபவங்களைக் ;குறிப்பிடுவர்.விடைகளை எழுதிவைக்கவும். மாறாக, அவரை தனது கதையை வீட்டுவேலையாக எழுதிக் (எழுதக்கூடியவராக இருந்தால்) கொண்டுவர வைக்கலாம்.

அடுத்ததாகப் பாதிக்கப்பட்டவர் கூறிய அல்லது எழுதிய முதலாவது கடினமான காலத்தைப் பற்றி ஆராயவும். அக்காலத்தில் பதற்றமான அல்லது துன்பமூட்டும் சந்தர்ப்பங்கள் இருந்தனவா? எனக் கேட்டறிதல் வேண்டும். பாதிக்கப்பட்டவர் இவ்வாறான ஒரு சந்தர்ப்பம் அல்லது பல சந்தர்ப்பங்களைக் குறிப்பிடலாம். இச்சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற ஒவ்வொரு நிகழ்வையும் கூறுதல் அல்லது எழுதுதல் வேண்டும் .உதாரணமாக 'என்னை அவர்கள் ;குடும்பத்திலிருந்து பிரித்த பொழுது', 'அவன் துப்பாக்கியால் குறிவைத்த போது'அல்லது' வெடிச்சத்தம் கேட்டபோது' என்றவாறு கூறலாம். பின்னர் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நடந்தவற்றை விபரமாகப் பதிவுசெய்தல் வேண்டும். பின்வரும் வினாக்கள் மூலம், விபரங்களை வெளிக்கொணர உதவலாம். பாதிக்கப்பட்டவர் இக்கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் உணர்ச்சிவசப்பட்டுவிடுவர். இது எதிர்பார்க்கப்பட வேண்டியதே. இது அவர்களுக்கு நடந்த சம்பவத்திலிருந்து மீள உதவும். அவர் தயக்கத்தைக் காட்டின் அவசரப்படுத்தல் கூடாது. சிலருக்கு கதைப்பதற்கு, அழுவதற்கு அல்லது அமைதியாக இருப்பதற்கு நேரம் தேவைப்படும். மிதமான உளக்கோளாறுகளின் பின் ஏதாவது ஒரு குறிப்பிட்ட காலம் மற்றையவற்றை விடக் கூடிய கடினத்தைக் காட்டியதா? எனக் கேட்டல் வேண்டும். கடினத்தன்மையின் ஒழுங்கிற்கேற்ப அனுபவத்தை வரிசைப்படுத்தி எழுதவும். பலருக்கு ஒரு காலப்பகுதியே கடினமாக இருந்திருக்கும். வேறு சிலர் இவ்வாறு பல கடினமான காலப்பகுதிகளை அனுபவித்திருப்பர். உதாரணமாக, பல இடப்பெயர்வுகள், திரும்பத் திரும்பத் தடுத்து வைக்கப்பட்டுச் சித்திரவதைக்கு உட்படுத்தப்படல். மேலும், ஒரு கடி;னமான காலப்பகுதியில் பல கொடூர நிகழ்வுகள், சம்பவங்கள்,அனுபவங்கள் நடந்திருக்கலாம். ஆகவே இவையெல்லாம் வேறு வேறாக,ஒழுங்கான முறையில் ஆவணப்படுத்தப்பட்டுப் பிறகு உதவியளித்தலின்போது, ஞாபகத்தில் மீட்டெடுக்கவேண்டி நேரிடும்.

*அமர்வு - 05- 07 குறிக்கோள்*: பாதிக்கப்பட்டவருடைய வாழ்க்கையின் பயங்கர அனுபவங்களின் தாக்கத்தைக் குறைத்தல். இந்தச் சந்திப்பின்போது பாதிக்கப்பட்டவரிடம், நீங்களும் அவர்களுடன் சேர்ந்து முன்னர் குறிப்பிடப்பட்ட அல்லது எழுதிய காலங்களுக்குச் செல்லுகின்றீர்கள் என்பதனைக் கூறவேண்டும். இது இலகுவானதல்ல. இது சீழ்க்கட்டி குணமடைவது போன்றது.

பாதிக்கப்பட்டவரிடம், ஏற்கனவே கற்ற சுவாசப்பயிற்சி போன்ற தளர்வுப் பயிற்சியினை மேற்கொள்ளும்படி கேட்டல்வேண்டும். முன்னையஅமர்வுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் கடினத்தை ஏற்படுத்திய நிகழ்வுகளில், குறைந்த பாதிப்பை ஏற்படுத்திய சந்தர்ப்பத்திற்கு முதலில் செல்லவும். நீங்கள் எழுதி வைத்துள்ளதை வாசிப்பதன் மூலம் அல்லது அவரால் கீறப்பட்ட படத்தைக் காட்டுவதன் மூலம் பாதிக்கப்பட்டவரின் மனதை வெளிப்படுத்தச் செய்யலாம். ஓர் அமர்வில், ஒரு கடினமான அனுபவத்தில் ஒன்று அல்லது இரண்டு கொடூர நிகழ்வுகளினூடாகச் செல்லலாம். காலக்கிரமத்தில் நடந்த நெருக்கீட்டின் அவஸ்தைகளுக்கு முகங்கொடுத்துப், பழகி அதிலிருந்து விடுபடும் நிலைக்கு அவரைக் கொண்டு வரவும்.

*அமர்வு - 08 குறிக்கோள்*: அமர்வை முற்றுப்பெற வைத்தல். பாதிக்கப்பட்டவரிடம் இன்னும் சில அமர்வுகளே இருப்பதாகக் கூறவேண்டும். பாதிக்கப்பட்டவர் தன்னுடைய கடினமான கடந்த காலத்தை வெற்றி கொண்ட முறை பற்றிப் பாராட்டுதல் வேண்டும். நல்ல நிலைமை படிப்படியாகத்தான் வரும் என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். சில சமயம் பாதிக்கப்பட்டவர் எதிர்காலத்தில் மீண்டும் குழப்பத்தை உணரலாம் என்பதனை விபரித்தல் வேண்டும். இது சாதாரணமாக மாறிய காயம் ஒன்று மீண்டும் தாக்கப்படுவதனைப் போன்றது என்பதனைக் கூறவும். மீளவும் பாதிப்புகள் உருவாகின், அவை வெளியொருவரின் உதவியின்றித் தானாகவே பெரும்பாலும் மறைந்துவிடும் என்பதனைக் கூறல் வேண்டும். சிலவேளைகளில் மக்கள் தம்முடைய கொடூர அனுபவங்களிலிருந்து மீளுவது கடினமாக இருக்கும். அந்தக் கடினமான சமயத்தில், அவருடைய பிரயோசனமான செயற்பாட்டை அல்லது பங்கினை உணர்வது கடினமாக இருக்கும். அதைப் பற்றிக் கலந்துரையாடி நடந்தவற்றில் அர்த்தம் காண உதவுவது நன்மை பயக்கும்.

தொடர்ச்சி...

## பயங்கரவாதத்துடன் தொடர்பில்லாதவர்களை ...

கூறியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பயங்கரவாத செயலுடன் தொடர்பில்லாவிட்டால் அவர்களை விடுவிக்குமாறு ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதேநேரம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பந்தமான விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி கூறியுள்ளார்.



தொடர்ச்சி...

## ஹிஸ்புல்லாவின் அரசியலும் சஹ்ரான்களின் உருவாக்கமும்

இவ்வுரை வெட்டவெளிச்சமாக முஸ்லிம்களை உயிருக்கு அஞ்சாது ஆயுதமேந்திப் போராட வேண்டும் என்ற அறைகூவலாக இருப்பதை பல ஊடகங்களும் சுட்டிக்காட்டியிருந்தன. ஆனால் ஹிஸ்புல்லா பயந்து கொண்டிருக்கின்ற முஸ்லிம்களுக்கு ஆறுதல் வார்த்தையாகத்தான் இவ்வாறு உரையாற்றினேன் எனக் கூறுகின்றார். இந்த நகைப்பிற்கிடமான விளக்கத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச முஸ்லிம் தலைவர்கள் சிங்களத்தில் பேசும்போது இன நல்லிணக்கத்தையும் தமிழில் பேசும்போது இனவாதத்தினையும் பேசுகிறார்கள் என்று கூறியிருந்தார். முன்னாள் அமைச்சர் பசீர் சேகுதாவுத் அவர்களும் கூட இவ்வாறான வீரவசன உரைகளைக் கண்டித்திருந்தார்.

எனவே ஹிஸ்புல்லா கிழக்கு முஸ்லிம்களின் தாயகம் அதனை அரபுமயப்படுத்தல் தமது கடமை என்கின்ற கற்பனாவாதங்களில் இருந்து விடுபட்டு பல்லின சமூகங்களும் ஐக்கியத்தடனும் அவரவர் இன,மத,மொழி உரிமைகளுடனும் அச்சமின்றி வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்கான அரசியலை செய்வதற்கு முன்வரவேண்டுமே தவிர இனிமேலும் சஹ்ரான்களை உருவாக்குகின்ற அரசியலை அவர் நாடக்கூடாது என்பது ஏனைய சமூகங்களின் சார்பான கோரிக்கையாகும்.

## 'காலத்தின் தொழில் நுட்ப வளர்ச்சி வேகத்துக்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்' - கிழக்கின் புதிய ஆளுனர்



காலம் எந்தளவுக்கு மாறிக்கொண்டு செல்கின்றதோ அதன் வேகத்தில் மக்களின் வாழ்க்கையையும் தொழில்நுட்பத்தையும் இணைத்து செயற்படுவோமானால் எதிர்காலத்தை எதிர் கொள்ளக்கூடியவர்களாக மாறலாம் என்று கிழக்கு மாகாண புதிய ஆளுநர் ஷான் விஜயலால் டி சில்வா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான விசேட மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான என்.ஏ.ஏ.புஸ்பகுமாரவின் வரவேற்புரையுடன், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி கே.முரளிதரனின் பங்குபற்றலுடன் இக்கூட்டம் நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாணத்தின் ஆளுநர், 'கிழக்கு மாகாணம் 30 வருடங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டதொரு மாகாணம். அதற்கு நாம் அனைவரும் முகம் கொடுத்தவர்களாக இருக்கின்றோம். அதன் பெறுபேறுகள் என்னவென்பதும் நம் எல்லொருக்கும் தெரியும். கடந்த ஏப்ரல் 21ஆம் திகதிக்குப் பின்னர் கிழக்கு மாகாணம் பல்வேறு வகையான இன்னல்களுக்கு முகம் கொடுத்தது.

இவற்றினைக் கருத்தில் கொள்ளாது நாம் அனைவரும் இணைந்து இந்தக் கிழக்கு மாகணாத்தினைக் கட்டியெழுப்புவதற்காக ஒன்றிணைய வேண்டும். எந்தவிதமான உதவிகள் தேவையாக இருந்தாலும் என்னை அணுகி உங்களது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.' என்று கூறினார்.

## கிழக்குமாகாண எந்திரவியல் திரவியப் பரிசோதனை ஆய்வு கூடம் திறப்பு



கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையினால், எந்திரவியல் திரவியப் பரிசோதனை ஆய்வு கூடம் திருகோணமலை பவர் ஹவுஸ் வீதியில் கடந்த வாரம் வியாழக்கிழமை(13) வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.
பிரதம அதிதியாக கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளரும் முன்னாள் மாகாண அமைச்சருமான எம்.



எஸ்.சுபைர் கலந்து கொண்டார்.
அத்துடன், இத்திறப்பு விழா நிகழ்வில், கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் யு.எல்.ஏ.அசீஸ், கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் ஆர்.நெடுஞ்செழியன், நிதியமைச்சின் பிரதிச் செயலாளர் எச்.எம்.ஹ_சைன், திட்டமிடல் பிரதிச் செயலாளர் என்.தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் கடந்த 2015ஆம் ஆண்டு 50 மில்லியன் ரூபாவில் கட்டிமுடிக்கப்பட்டு, திருகோணமலை நகர சபையிடம் கையளிக்கப்பட்ட இவ் எந்திரவியல் திரவியப் பரிசோதனை ஆய்வு கூடத்தினை கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபை, நகர சபைத் தவிசாளருடனான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் அடிப்படையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்துக்கான எந்திரவியல்



திரவியப் பரிசோதனை ஆய்வு கூடம் திறக்கப்பட்டதன் மூலம் அனைத்து திணைக்களங்கள், ஒப்பந்தகாரர்கள் மற்றும் தேவையுள்ளவர்கள் தங்களுடைய கல், மண், கொங்கிறீற், கிரவல் உள்ளிட்ட கட்டுமானப் பொருள்களை உடனடியாகப் பரிசோதனை செய்து கொள்ள முடியும் என்றும் கிழக்கு மாகாண வீடமைப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் ஆர்.நெடுஞ்செழியன் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ச்சி...

## கல்முனையில் நான்காவது நாளாகப் ...

ஜனவெள்ளம் திரண்டுள்ளது. அதனைக்கட்டுப்படுத்த போக்குவரத்துப் பொலிசார் சற்றுச் சிரமப்பட்டனர்.
கல்முனைப் பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.சூரியபண்டார சிரேஸ் பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் நேரடியாக வந்து ஏற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடினர்.

நேற்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் வண.ரத்னஸலிய தேரர், மட்டு. விகாராதிபதி வண.அம்பிட்டிய தேரர் மற்றும் சமயகுருமார்கள் வருகை தந்தனர்.

தமிழ்மக்கள் விடுதலைமுன்னணியின் செயலாளர் நாயகம் செ.கஜேந்திரன், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகளின் அமைப்பின் பொதுச்செயலாளர் பு.பிரசாந்தன், மகளிரணித் தலைவி செல்வி, த.தே. கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன், பிரதேசசபைத் தவிசாளர்களான சி.புஸ்பலிங்கம் (கொக்கட்டிச்சோலை), சோ.மகேந்திரலிங்கம் (ஆரையம்பதி), முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மா.நடராஜா, த.அ.கட்சி உறுப்பினர் சாணக்கியன் உள்ளிட்ட பல தமிழ்த்தலைவர்களும் அங்கு வந்திருந்தனர். மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. திங்களன்று ஒரு கொட்டிலில் 4 கதிரைகளில் 4 பேர் ஆரம்பித்த இவ்வுண்ணாவிரதப் போராட்டம் 12 கொட்டில்களாகியது மட்டுமல்லாமல் கட்டில்கள் மெத்தைகள் மின்விசிறிகள் எனப் பரவலாக விசாலமாகி வருகிறது.

நேற்றையதினம் சேனைக்குடியிருப்பு தரவைப்பிள்ளையார் ஆலயம் போன்ற இடங்களிலிருந்து மக்கள் சாரிசாரியாக பதாதைகளுடன் பேரணியாக உண்ணாவிரத இடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

தொடர்ச்சி...

## பாட்டும் நானே ...

தன் பாடல்களில் வெளிப்படுத்தி இருக்கிறார். எனினும் சிலவேளைகளில் உச்சத் ஸ்தாயியில் பாடும் பொழுது, திமிறும் குதிரையாகும் தனது குரலைக் கடிவாளத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தவறி இருக்கிறார் என்பதும் அவதானிப்புக்கு உரியது. எனினும் அவரைப் பிரதியீடு செய்யும் உரத்த குரல் பாடகரைக் காண்பதென்பது முடியாத காரியமே.

டி.எம்.எஸ். தமிழ் மனங்களுடன் கலந்து விட்ட இன்னொரு பிரதேசம் உண்டு. எத்தனை இசைப் புயல்களும், சுனாமிகளும் வந்து தாக்கினாலும் கூட நெருங்க முடியாத இடம் அது. கோயில்களுடன் ஒட்டிய கொண்டாட்டங்கள் வரும் வரை ஒவ்வொரு ஒலி பெருக்கியினுள்ளும் அந்தப் பாடல்கள் ஒளிந்திருக்கின்றன.

'அழகென்ற சொல்லுக்கு முருகா...'

'கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்.'

'முருகா, நீ வர வேண்டும்'
'கற்பனை என்றாலும் '
'மண்ணானாலும் திருச்செந்தூரில் '
'உனைப் பாடும் தொழிலின்றி '
'புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே '

மரணம் என்பது கலைஞனுக்கு விதி விலக்கானதல்ல. அவன் எவற்றை இங்கே விட்டுச் செல்லுகிறான் என்பதைப் பொறுத்தே அவன் இழப்பின் பெறுமதி அளவிடப்படுகின்றது.

அண்மையில் மரணச் சடங்கொன்றுக்காக இடுகாட்டுக்கு சென்றிருந்தேன். அங்கே ஒலிபெருக்கியில் டி.எம்.எஸ். ஸின் 'வீடு வரை உறவு' பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது.

'நான் நிரந்தரமானவன் அழிவதில்லை; எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை' என அவர் சொல்லாமல் சொல்லுவது போல் இருந்தது.

தொடர்ச்சி...

## சோறுடைத்த சோழர்கள்...

பென்னம்பெரிய ஆலயங்களை சோழன் உருவாக்கினான். அவற்றை நிருவகித்த பிராமணர்களுக்கு பிரமதேயங்களை வழங்கினான் என்கின்ற வரலாறுகளின் பின்னணியில் பாரிய சமூக பொருளாதார மாற்றங்கள் நடந்திருக்கின்றன.

பூர்வ குடிகளுக்கு மிகப்பெரிய அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றது. அக்காலங்களில் நிலங்கள் பொதுச் சொத்தாகவே காணப்பட்டன. அங்கு வாழ்ந்துவந்த விவசாயக்குடிகளின் வளமான நிலங்களை பறித்தெடுத்தும், அவர்களை துரத்தியடித்துமே பிரமதேயங்கள் உருவாக்கப்பட்டன. இதற்காகவே முதன்முதலாக நிலங்களை அளந்தும், பிரித்தும் எல்லையிடும் முறையை சோழன் உருவாக்கினான். இதில் "உலகளந்தான் சோழன் என்று பிராமணர்கள் பெருமைகொண்டனர். இன்றுவரை தமிழ்நாட்டில் காணப்படுகின்ற ஆலயங்களின் பெயரிலும் மடங்களின் பெயரிலும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருப்பதற்கான அடிப்படைக்காரணம் இதுவேயாகும். ஆண்டாண்டு காலமாக இவற்றை அனுபவித்து வரும் எங்கிருந்தோ வந்த பிராமணர்களுக்கும் மேட்டிமைச்சாதியினருக்கும் பிரமதேயங்களை உருவாக்கிய சோழராட்சிக்காலம் ஒரு பொற்காலமாகவே இருக்கும்.

அதேவேளை பூர்வ குடிகளாக இருந்து நிலமற்றவர்களாக மாற்றப்பட்டு, இன்றுவரை கூலிகளாகவும், குடிமைத்தொழிலாளிகளாகவும் வாழும் ஆதிதிராவிடர்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் அது இருண்ட காலமே. இதன் வெளிப்பாடே ரஞ்சித் போன்றவர்கள் இன்று எழுப்புகின்ற கேள்விகளாகும்.

# அக்கினி புலையவெளி உணவு உற்பத்திப் பொருட்கள்

AGNI PULAYAVELY INDUSTRIES

- சுவையான மரவள்ளிப் பொரியல்
- சுவையான மிக்சர்

ஆகியன தற்போது எம்மால் விற்பனை செய்யப்படுகின்றன. தேவையானவர்கள் எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல:- 0771516203

விலாசம் : அக்னி உற்பத்திகள், பதுளை வீதி, புலையவெளி, செங்கலடி. மட்டக்களப்பு



## மரவள்ளிக் கிழங்குச் சீவல்

100 கிராம் 60 ரூபாய்

200 கிராம் **110** ரூபாய்



## மிக்சர்

1 கிலோ 300ரூபாய்

எம்மிடம் இருந்து இந்த உற்பத்திப் பொருட்களைப் பெற்று விற்பனை செய்ய விரும்புவோர் விலையைப் பேசித் தீர்மானிக்கலாம்.

கொள்வனவு செய்யப்படும் அளவினை பொறுத்து மட்டக்களப்பிற்கு உட்பட்ட பகுதிகளில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)